இலக்கு
GLOBAL TAMIL MEDIA CENTER
வாராந்த மின்னிதழ்
ilakku.org
SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb
LIKE US! facebook.com/ilakku.ilakku.10
FOLLOW US! twitter.com/Ilakku1
இதழ் 294 | சனி, ஜுலை 06, 2024 | 13 பக்கங்கள்

# சிங்களவர்களிடம் தோல்வியடைந்த தலைவராகவே



# சம்பந்தனை தமிழர்கள் பார்க்கின்றனர்

மட்டு.நகரான்

## தமிழினத்துக்கு மிகவும் தேவையான ஒரு காலகட்டத்தை

# சம்பந்தன் எவ்வாறு கையாண்டார்



பேராசிரியர் அமிர்தலிங்கம் செவ்வி

## ஹமாசைத் தோற்கடிக்க முடியாது

# திணறும் இஸ்ரேல்

தமிழில்: ஜெயந்திரன்

info@ilakku.org

© 2024 இலக்கு இணையம்

# அரசியலமைப்பையும் மீறி ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைக்க முயற்சி



இலங்கை ஜனாதிபதியும் அவரது அடிமைகளும் அரசியலமைப்பையும் மீறி ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைக்க முயற்சித்து வருகின்றனர். மாளிகைகளுக்குள் இருந்து கொண்டு சதிகள் மூலம் ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கான பின்னணி தயார்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சாட்டினார்.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு இடையூறு விளைவிக்கும் அரசாங்கத்தின் சதி நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மட்டக்களப்பில் புதன்கிழமை(3) உரையாற்றும் போதே இவ்வாறு குற்றம் சாட்டிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் கூறுகையில்,

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

# சம்பந்தனின் இறுதிக் கிரியைகள் நாளை திருகோணமலையில்



இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இராஜவரோதயம் சம்பந்தன் தனது 91ஆவது வயதில் ஞாயிற்றுக்கிழமை(30) இரவு 11 மணியளவில் கொழும்பில் காலமானார்.

அவரின் இறுதிக் கிரியை கள் ஞாயிற்றுக்கிழமை(7) திருகோணமலை இந்து மயானத்தில் இடம்பெறவுள்ளது.

அன்னாரது பூதவுடல் வியாழக்கிழமை(4) திருகோணமலைக்கு கொண்டு வரப்பட்டு வெள்ளிக்கிழமை(5) முதல் ஞாயிற்றுக்கிழமை(7) வரை, திருகோணமலை தபாலக வீதியில் உள்ள அன்னாரது இல்லத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்று மாலை அன்னாரது பூதவுடல் தகனக்கிரியைக்காக திருகோணமலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படவுள்ளது.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# ரஸ்யா- இந்தியா கூட்டு திட்டத்தில் மாத்தள விமான நிலைய அபிவிருத்தி



ரஸ்யா- இந்தியா இணைந்து மாத்தள விமான நிலையத்தை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் அடுத்த சில வாரங்களில் ஆரம்பமாகவுள்ளதாக இலங்கையின் துறைமுகங்கள் கப்பல் மற்றும் வான் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறீபால டீ சில்வா தெரிவித்துள்ளார்.

இந்தியா 69 மில்லியன் டொலர்கள் நிதி உதிவியுடன் காங்கேசன்துறை துறைமுகத்தை புனரமைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது. இலங்கை விமான நிறுவனத்தின் விமானங்களை விற்பனை

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# சிறுவர்களை பாதுகாப்பாக வளர்ப்பதற்கு ஆதரவாக ஒரு சமூக சேவை பணிக்குழு



திருகோணமலை மாவட்ட செயலகம் மற்றும் CERI நிறுவனமும் இணைந்து மாற்று பராமரிப்பு பணிக்குழு மற்றும் சிறுவர்களை பாதுகாப்பாக வளர்ப்பதற்கு ஆதரவாக ஒரு சமூக சேவை பணிக்குழுவை நிறுவுதல் தொடர்பான கலந்துரையாடலொன்று வியாழக்கிழமை(04) மாவட்ட செயலக உப ஒன்றுகூடல் மண்டபத்தில் மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

CERI நிறுவனத்தின் தேசிய பணிப்பாளர் வி.தர்ஷன் அவர்களினால் இக்கலந்துரையாடல் பற்றிய அறிமுகம் மற்றும் நோக்கம் என்பன எடுத்து கூறப்பட்டது.

குழந்தைகள் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள்,

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

# உக்ரைனுக்கு ஆயுதங்களை வழங்கும் அமெரிக்க நிறுவனத்தில் வெடிவிபத்து




அமெரிக்காவின் ஆர்கன்சஸ் பகுதியில் இருக்கும் ஜெனரல் டைனமிக்ஸ் என்ற டாங்கிகளை தகர்க்கும் ஜவலின் வகை ஏவுகணைகள் விமானங்களில் இருந்து வீசப்படும் கெல்பயர் ஏவுகணைகள் மற்றும் 155 மி.மீ ஆட்டிலறி பீரங்கி எறிகணைகளை தயாரிக்கும் நிறுவனத்தில் கடந்த புதன்கிழமை ஏற்பட்ட வெடிவிபத்தினால் ஒருவர் காணாமல் போயுள்ளதாகவும், இருவர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆயுத உற்பத்தி நிறுவனத்தில் வெடிவிபத்து ஏற்பட்டுள்ளதாகவும், தாம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் இந்த நிறுவனத்தின் பேச்சாளர் பேர்கிலி வேர்லி தெரிவித்துள்ளார். எனினும் இந்த வெடிவிபத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பில் அவர் மேலதிக கருத்துக்கள் எதனையும் தெரிவிக்கவில்லை.

அதேசமயம், தொழிற்

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

# இங்கிலாந்தின் இளம் விளையாட்டு வீரராக ஈழத் தமிழ் சிறுமி சாதனை



பிரித்தானியாவில் வசிக்கும் ஒன்பது வயதான ஈழத்துச் சிறுமியான போதனா சிவானந்தன் என்பவர் இங்கிலாந்தின் அனைத்துலகவிளையாட்டுக்குழுவில்அங்கம் வகிக்கும் மிகவும் வயது குறைந்த விளையாட்டு வீராங்கனையாக சாதனை படைத்துள்ளதாக பிரித்தானியாவின் பி.பி.சி ஊடகம் தெரிவித்துள்ளது.

இந்த மாதம் ஹங்கொரியில் இடம்பெறும் சதுரங்க விளையாட்டில் பிரித்தானியா வின் அனைத்துலக விளையாட்டுக் குழு

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# கியூபாவில் சீனாவின் புலனாய்வுத் தளம்?

அமெரிக்காவை கண்காணிக்கும் முகமாக கியூபாவில் சீனா புலனாய்வுத் தளங்களை அமைத்துவருவதாக அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட சிந்தனைப்பள்ளியான *The Center for Strategic and International Studies (CSIS)* என்ற அமைப்பு



வெளியிட்ட அறிக்கையை கடந்த புதன்கிழமை(3) சீனாவின் வெளிவிவகார அமைச்சகம் மறுத்துள்ளது.

அமெரிக்காவின் குவந்தனமோ கடற்படைத் தளத்தில் இருந்து 110 கி.மீ தொலைவில் சீனா இலத்திரனியல் சாதனங்களைக் கொண்ட தளங்களை அமைத்து வருகின்றது. இதன்மூலம் அமெரிக்காவின் படைத்துறை விண்வெளி ஆய்வுமைய மற்றும் வர்த்தக கப்பல் போக்குவரத்து தொடர்பான தொடர்பாடல்களை அது அவதானிக்க முடியும் என

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# உயர் வருமானம் கொண்ட நாடாக உயர்ந்த ரஸ்யா

உயர் வருமானம் கொண்ட நாடாக ரஸ்யாவை உலக வங்கி தரமுயர்த்தியுள்ளது. 2022 ஆம் ஆண்டில் 12,830 டொலர்களாக ஆக இருந்த தனிநபர் வருமாம் 2023 ஆம் ஆண்டு 14,250 டொலர்களாக ஆக உயர்வடைந்துள்ளதால் உலக வங்கி இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இந்த அறிவிப்பு தமக்கு ஆச்சரியமானது அல்ல என *Center for Market Research at the Higher School of Economics* என்ற அமைப்பின் தலைவர் ஜியோர்ஜி ஒப்ராஸ்கொவிச் தெரிவித்துள்ளார். ரஸ்யாவின் வருமானம் 5 விகிதம் அதிகரித்துள்ளது. பொருளாதாரம் வளர்ந்தாலே வருமானம் வளரும், ஏனெனில் பொருளாதாரம் வளர்ந்தால் மட்டுமே இலாபம் அதிகரிக்கும், அதுவே ஊதிய அதிகரிப்புக்கு வழிவகுக்கும். ரஸ்யாவின் பொருளாதாரம் கடந்த ஆண்டு 3.6 விகிதம் வளர்ந்துள்ளது. வருமானம் 4.5 விகிதமும் ஊதிய அதிகரிப்பு 13 விகிதமும் உயர்ந்துள்ளது. பொறியியல் மற்றும் படைத்துறை நிறுவனங்கள் 40 விகித வளர்ச்சியை கண்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

## பிரித்தானியா நாடாளுமன்றம் செல்லும் ஈழத்தமிழ் உறுப்பினருக்கு இலக்கு ஊடகம் தனது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றது



*பிரித்தானியா தேர்தலில் தொழில்கட்சி சார்பில் போட்டியிட்ட உமா குமாரன் அவர்கள், 19,145 வாக்குகளை பெற்று பெரும் வெற்றியடைந்துள்ளார்.*

*பிரித்தானியாவில் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் பங்கெடுத்து பிரித்தானியா நாடாளுமன்றத்திற்கு செல்லும் முதலாவது ஈழத் தமிழ் பெண் உமா ஆவார்.*

*அவரை எதிர்த்துப் போட்டியிட்ட எல்லாக் கட்சி உறுப்பினர்களையும் விட பல மடங்கு அதிக வாக்குகளைப் பெற்று உமா குமரன் வெற்றி பெற்றுள்ளார்.*


*பிரிட்டன் பொது தேர்தலையொட்டி, மொத்தமுள்ள 650 தொகுதிகளில் வியாழக்கிழமை(04) வாக்குப் பதிவு விறுவிறுப்பாக நடைபெற்றது.*

*இந்த தேர்தலில் எதிர்க்கட்சி தலைவர் கியெர் ஸ்டார்மர் தலைமையிலான தொழிலாளர்கட்சி, பிரதமர் ரிஷி சுனக் தலைமையிலான கன்சர்வேட்டிவ் கட்சியை தோற்கடித்து மாபெரும் வெற்றியை பதிவு செய்துள்ளது.*

*இந்த தேர்தலில் அதிகளிவில் இந்தியர்க்கள் போட்டியிட்டனர்.இந்த நிலேயில் தொழிலாளர் கட்சி சார்பில் போட்டியிட்ட தமிழ்ப் பெண் உமா குமரன், லண்டன் ஸ்டராட்ஃபோர்டு தொகுதியில் 19,145 வாக்குகளை பெற்று மாபெறும் வெற்றியை பதிவு செய்துள்ளார். அவரை எதிர்த்து போட்டியிட்ட கன்சர் வேட்டிவ் கட்சி வேட்பாளரான கேன் பிளாக்வெல் 3,144*

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## பிரித்தானியாவில் தொழிற்கட்சியின் வெற்றியும் சவால்களும்



*கடந்த வியாழக்கிழமை(4) பிரித்தானியாவில் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் தொழிற்கட்சி 412 ஆசனங்களைப் பெற்று மிகப்பெரும் வெற்றியீட்டியுள்ளது. கடந்த 14 வருடங்களாக ஆட்சியில் இருந்த பழமைவாதக் கட்சி 121 ஆசனங்களைப் பெற்றுள்ளதுடன், லிபரல் டெமோகிறட்டிக் கட்சி 71 ஆசனைங்களையும், நைஜல் பெராஜ் தலைமையிலான றிபோம் என்ற கட்சி 5 ஆசனங்களையும், வட அயர்லாந்தின் விடுதலைப்போராட்ட அமைப்பின் அரசியல் பிரிவான சின்பெயின் கட்சி 7 ஆசனங்களையும் பெற்றுள்ளன. ஸ்கொட்லாந்தில் தனிநாடு கோரிவந்த ஸ்கொட்லாந்து தேசிய கட்சி முன்னைய நிலையில் இருந்து 38 ஆசனங்களை இழந்து 9 ஆசனங்களை மட்டும் கைப்பற்றியுள்ளது.*

*வெள்ளிக்கிழமை(5) பக்கிங்கம் மாளிகையில் அரசர் சார்ஸ்யை சந்தித்து உத்தியோகபூர்வமாக தனது பதவியை அறிவித்த கியர் ஸ்ராமர் பின்னர் தனது*

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

## ஈழத்தமிழர் இறைமையைப் பேணுவதற்கான அழுத்தக் குழுவாக ஈழத்தமிழர்கள் மாறுவதற்கு பிரித்தானியத் தேர்தல் முடிவுகள் வழிகாட்டட்டும்

ஸ்டர்ட்போர்ட் அன்ட் பௌ தேர்தல் தொகுதியில் அளிக்கப்பட்ட வாக்குகளில் 44.1 வீதமான 19145 வாக்குகளைப் பெற்று அவருக்கு அடுத்தபடியாக வந்த 17.5 வீதமான வாக்குகளைப் பெற்ற கிறீன் கட்சியைச் சேர்ந்த ஜோ கட்சன் சுமோல் பெற்ற 7511 வாக்குகளை விட 11634 மேலதிக வாக்குகளால் லேபர் கட்சியின் உமா குமரன் வெற்றி பெற்றுள்ளார். இதன்வழி வெஸ்ட் மினிஸ்டர் பாராளுமன்றத்து வரலாற்றிலேயே பிரித்தானியத் தமிழர் என்கின்ற இனத்துவச் சிறுபான்மையினத்தின் முதல் பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினர் என்கிற வரலாற்றுப் பெருமையை லேபர் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் உமா குமரன் பெற்றுள்ளார். உமா குமரன் அவர்கள் "14 ஆண்டுகால டோரி சித்திபெறத் தவறிவிட்டது. இப்பொழுது மாற்றத்துக்கான நேரம். நாம் ஒன்று சேர்ந்து ஸ்டார்ட்போர்ட் அன்ட் பௌக்கான எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவோம். நான் உங்கள் குரலாக வெஸ்ட் மினிஸ்டரில் ஒலிப்பேன். அத்துடன் உங்களுக்காகப் போராடுவேன்" என்றே அவரது தேர்தல் கொள்கை விளக்கத் துண்டுப்பிரசுரத்தில் பதிவு செய்திருந்தார். இந்த வகையில் பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் கடமைப்பொறுப்பு என்னவென்பதை அவர் தனது தொகுதி மக்களுக்கு எடுத்துரைத்து அவர்களின் வாக்குகளால் தெரிவாகியுள்ளார். இதனாலேயே அவர் இந்தக்கடமைப் பொறுப்புடன் லேபர் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராகவும் அதே வேளையில் அவரது ஈழத்தமிழினத்தன்மையின் அடிப்படையில் பிரித்தானியத் தமிழர்களின் தேசியத்தன்மைக்காகப் பொதுவாகவும் ஈழத்தமிழர்களின் தேசியத்தன்மைக்காகச் சிறப்பாகவும் போராட வேண்டும் என்பதையும் இலக்கு இவ்விடத்தில் எடுத்துக் கூறவிரும்புகிறது. இந்த மும்முனைப்பட்ட மக்கள் பணிகளின் இணைப்புப் பாலமாக அவர் பணியாற்றிச் சிறப்புகள் பல பெற்றிட 'இலக்கு' தனது வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறது. அதுவும் உலகில் ஈகத்தில் தன்னிகரில்லாத உரிமைக்காகப் போராடுவதில் ஈடிணையில்லாத ஈழத்தமிழ்ப் பெண்களின் தொன்மையும் தொடர்ச்சியுமான உறுதியையும் அர்ப்பணிப்புக்களையும் தனது மரபணுவாகக் கொண்டுள்ள மாண்பமை உமா குமரன் அவர்களுக்கு அந்த மரபணுவே அவருக்கான வெற்றிகளுக்கான அடித்தளமாக விளங்கும் என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை என்பது இலக்கின் உறுதியான எண்ணம்.

மேலும் "ஸ்டர்ட்போர்ட் அன்ட் பௌ" தேர்தல் தொகுதியில் மூன்றாவது இடத்தில் பிரித்தானிய வேர்க்கர்ஸ் கட்சியைச் சேர்ந்த கலிமா கான் 7.5 வீதமான வாக்குகளான 3274 ஐப்பெற்றார். நான்காவது இடத்தில் கொன்சர்வேடிவ் கட்சியின் கேன் பிளக்வெல் 7.2 வீதமான வாக்குகளான 3114 ஐப் பெற்றார். ஐந்தாவது இடத்தில் கட்சிசார்பற்ற வேட்பாளராகப் போட்டியிட்ட நிசாம் அலி 5.5 வீதமான வாக்குகளான 2380 ஐப் பெற்றார். ஆறாவது இடத்தில் றிவோர்ம் யூகே கட்சியைச் சேர்ந்த ஜெவ் ஈவான்ஸ் 4.8 வீதமான வாக்குகளான 2093 ஐப்பெற்றார் ஏழாவது இடத்தில் லிபரல் டெமொகிரெடி கட்சியைச் சேர்ந்த ஜெனி லிட்டில் 4.4 வீதமான வாக்குகளான 1926 ஐப் பெற்றார். எட்டாவது இடத்தில் கட்சி சார்பற்ற வேட்பாளரான ஒமார் பாரூக் 4.2 வீதமான வாக்குகளான 1826 ஐப் பெற்றார். ஒன்பதாவது இடத்தில் கட்சி சார்பற்ற வேட்பாளரான பியோனா லலி 4.1 வீதமான வாக்குகளான 1791ஐப் பெற்றார். பத்தாவது இடத்தில் கட்சி சார்பற்ற வேட்பாளரான ஸ்டீவ் கெட்லி 0.9 வீதமான வாக்குகளான 375 ஐப் பெற்றார். இது பிரித்தானிய மக்கள் தங்களின் இருகட்சிக்குள் ஆட்சியாளரைத் தெரிவு செய்தல் என்கிற தேர்தல் வழமையிலிருந்து விடுபட்டு தங்கள் தேவைகளைக் குறைகளை வெளிப்படுத்தத் தேர்தல் மேடையை (The Husting) மட்டுமல்ல தேர்தலில் போட்டியிடுவதையும் வழக்காக்குகின்றார்கள் என்பதைத் தெளிவாக்கியுள்ளது. காலத்தோடும் உலகத்தோடும் பரிணாமம் பெறும் அரசியல் மாற்றங்களுக்கு ஏற்ப மக்களின் தேர்தல் மரபுகளும் மீளுருவாக்கம் செய்யப்பட வேண்டும் இதையே பரிணாம வளர்ச்சி பெறும் ஈழத்தமிழர்களின் அரசியல் வாழ்வுக்கு ஏற்ப தாயகத்தில் பொதுவேட்பாளர் முறைமை வழியாகவும், புகலிட வாழ்வு பெற்றுள்ள நாடுகளில் புலம்பெயர் ஈழத்தமிழருக்கானச் சொந்த அரசியல் கட்சிகளை அமைத்தும், ஈழத்தமிழ் மக்களின் தேவைகளைக் குறைகளை வெளிப்படுத்தத் தேர்தல் மேடையையும் தேர்தலில் வாக்குகள் சிதறிப் பலமிழப்பதைத் தவிர்க்க ஓரணியில் போட்டியிடுவதையும் உறுதி செய்யுமாறு 'இலக்கு' எடுத்துரைத்து வருகிறது.

2019ம் ஆண்டுத் தேர்தலில் இத்தொகுதியில் லேபர் கட்சிக்கு கிடைத்த வாக்கை விட 26.3 வீதமான வாக்குகள் குறைவாகவே பெற்றுள்ளது. அதே வேளை கிறீன் கட்சி 13.5 வீதம் அதிகமாக வாக்குளைப் பெற்றுள்ளது. அவ்வாறே லேபர் கட்சியிலும் கொன்சர்வேடிவ் கட்சியிலும் தொழிலாளர் நலன்கள் மறுக்கப்படுகின்றன என நிறுவப்பட்ட பிரித்தானிய வேர்க்கர்ஸ் கட்சி 7.5 வீதமும் பல்லின பல்பண்பாட்டு மக்களான நிறமக்களுக்கு (Colour People) எதிரான அதீத வலதுசாரிக் கட்சியான றிவோர்ம் யூ.கே. கட்சி 2.5 வீதமும் அதிக வாக்குகளைப் பெற்றமை பிரித்தானியாவில் காலநிலை மாற்றத்துக்குக் காரணமான இயற்கையைச் சீரழிப்பதற்கு எதிரான முயற்சிகளுக்கும், தொழிலாளர் நலன்பேணு முயற்சிகளுக்கும், பிரித்தானியாவில் குடிவரவு பெற்றவர்களுக்கு எதிராக பிரித்தானியாவைப் பிரித்தானியர்களுடையதாகவே மாற்ற வேண்டும் என்ற முயற்சிகளுக்கும் மக்கள் ஆதரவு பெருகி வருவதை உலகுக்கு உணர்த்தியுள்ளது. அவ்வாறே 14 ஆண்டுகளாகப் பிரித்தானியாவை ஆட்சி செய்த கொன்சர்வேடிவ் கட்சிக்கு 7.3 வீத வாக்குகளும் மற்றும் லிபரல் கட்சிக்கு 4.6 வீத வாக்குகளும் 2019ம் ஆண்டுத் தேர்தலை விடக் குறைவாக இத்தொகுதியில் பதிவாகின. இந்த மாற்றத்துக்கான முக்கிய காரணம் குறைந்த வீத வாக்குகளைப் பெற்ற கட்சிகள் மக்களின் கருத்துக்களைக் கேட்கவும் அதற்கு ஏற்ப மாற்றங்களை ஏற்படுத்திச் செயற்படவும் தவறினமையே ஆகும்.

இன்று சமகால உலகில் சிவில் அமைப்புக்கள் ஊடகங்கள் என்கிற இரு கட்டமைப்புக்களே மக்களின் எண்ணங்களையும் தேவைகளையும் பரிணாம வளர்ச்சிக்கு ஏற்ப வெளிப்படுத்தும் முக்கிய தளங்களாக உள்ளன. இதனாலேயே இலக்கு, தாயகத்திலும் புகலிடம் பெற்று வாழும் நாடுகளிலும் சிவில் அமைப்புக்களுக்கு உரிய மதிப்பளியுங்கள் ஊடகத்துக்கு உரிய இடமளியுங்கள், இவையே சமகாலத்தில் மக்களின் குரலாக வெளிப்படும் ஆற்றல்கள் என்பதை மீளவும் மீளவும் வலியுறுத்திக் கூறி வருகிறது. மேலும் லெஸ்ரர் தொகுதியில் லேபர் கட்சியின் நிழல் அமைச்சர்கள் அலுவலக அமைச்சர் ஜோனாத்தன் அஸ்வேர்த் (13760 வாக்குகள்) "இது காசாவுக்கான வெற்றி" எனப் போட்டியிட்ட சொக்கட் அடம் (14739 வாக்குகள்) அவர்களிடம் 1069 வாக்குகளால் தோல்வியடைந்ததும், லேபர் கட்சியின் முன்னாள் ஹோம்செகரட்டரி ஜக்ஸ் ஸ்ரோவின் தொகுதியாக விளங்கிய பிளக்பேர்னில் லேபர் கட்சியின் கேட் கொலர்ன் (10386 வாக்குகள்) முஸ்லீம் வேட்பாளரான அடனன் குசைன் (10518 வாக்குள்) அவர்களிடம் 132 வாக்குகளால் தோல்வி கண்டதும், டுவஸ்பெரி அன்ட் பட்லியில் லேபர் கட்சியின் நிழல் சன்சிலர் ரேச்சல் ரீவ்ஸின் முன்னாள் ஆலோசகர் கீத்தர் இக்பால் (8707 வாக்குகள்) அவர்கள் (15641 வாக்குகள்) அவர்களிடம் 6934 வாக்குளால் தோல்வி கண்டதும், பேர்மிங்காம் பெரி பாரில் லேபர்கடச்யின் பாராளுமன்ற உறுப்பினர் கலித் மொகமட் (12796) முஸ்லீம் வேட்பாளரான அயூப்கான் (13303) அவர்களிடம் 507 வாக்குகளால் தோற்றதும் இன்னும் பல தொகுதிகளில் முஸ்லீம் வேட்பாளர்கள் போட்டியிட்டதால் எல்லாக்கட்சியினரும் வாக்குகள் சிதறுண்டு திணறியதும் முஸ்லீம் மக்கள் தங்களுக்கான கட்சியை உருவாக்கித் தங்களின் தேவைகளை குறைகளை அடைவதற்கான அழுத்தக்குழுவாகச் செயற்படத் தொடங்கியதன் எடுத்துக்காட்டு. இவ்வாறே ஈழத்தமிழர்கள் தங்களுக்கான பிரித்தானியத் தமிழர் கட்சியொன்றை உருவாக்கினாலே கட்சிகளில் தங்கிவாழாது சுதந்திரமான முறையில் தங்களின் தேவைகளை குறைகளை தீர்ப்பதற்கான அழுத்தக் குழுவாக மாறமுடியும் என்பது இலக்கின் உறுதியான கருத்து. ஈழத்தமிழர் இறைமையைப் பேணுவதற்கான அழுத்தக் குழுவாக ஈழத்தமிழர்கள் மாறுவதற்கு பிரித்தானியத் தேர்தல் முடிவுகள் வழிகாட்டட்டும்.

**ஆசிரியர்**

# தமிழினத்துக்கு மிகவும் தேவையான ஒரு காலகட்டத்தை

# சம்பந்தன் எவ்வாறு கையாண்டார்





**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நீண்டகாலத் தலைவரும், திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ராஜதரோதயம் சம்பந்தனின் மறைவு இவ்வாரம் தமிழர் அரசியலில் பேசுபொருளாகியிருக்கின்றது. முக்கியமான ஒரு காலகட்டத்தில் அவர் வகித்த அரசியல் பாத்திரம் கடுமையான விமர்சனங்களுக்குள்ளாகியுள்ளது. இவை குறித்து கொழும்பு பல்கலைக்கழக கோபாலபிள்ளை அமிர்தலிங்கம் அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்களம் நிகழ்ச்சிக்கு வழங்கிய நேர்காணலை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை காணொளியில் YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**

**தமிழரசுக் கட்சியினதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் தலைவராக நீண்டகாலம் இருந்த இரா.சம்பந்தன் மரணமடைந்திருக்கின்றார். இதனால் தமிழ் அரசியல் பரப்பில் ஒரு வெற்றிடம் ஏற்பட்டுள்ளதா? இதனை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

*இலங்கையைப் பொறுத்தவரையில் பிரதான தமிழ் அரசியல் கட்சியின் தலைவராக இருப்பது என்பது சாதாரண விடயமல்ல. தமிழ்த் தலைவர் பல்வேறு தரப்பினருடைய அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யவேண்டியவராக இருக்கின்றார். தமிழ் மக்கள் தங்களுக்கு ஒரு தீர்வு வேண்டும். தமது மண்ணில் நிம்மதியாக வாழ வேண்டும் என்பது அவர்களுடைய 76 வருடகால எதிர்பார்ப்பு. இன்னொரு தரப்பு ஏனைய மக்களைப் போல எங்களுக்கும் அபிவிருத்தி சார்ந்த விடயங்களில் பங்கு வேண்டும். வேலைவாய்ப்பு வேண்டும் என்று எதிர்பார்ப்பதும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அதேவேளை, தமிழர்கள் பிரச்சினைக்குரியவர்களாக இருக்கக் கூடாது என்று சிங்கள அரசியல் தரப்பு எதிர்பார்க்கின்றது. இந்தியா இன்னொரு தரப்பாக இருந்துகொண்டு எங்களுடைய அரசியலில் பின்னிப் பிணைந்துகொண்டிருக்கின்றது. இந்தளவு விவகாரங்களையும் கையாள வேண்டியவராக ஒரு தமிழ் அரசியல் கட்சியின் தலைவர் இருந்தார். இருக்கிறார். இனிமேலும் இருக்க வேண்டிய கட்டாயம் உள்ளது.*

*சம்பந்தனின் அரசியல் வாழ்வு என்பது வெற்றி - தோல்விகள் சிறந்ததாக இருந்தது. யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் திடீரென முழு அதிகாரம் கொண்ட தலைவராக சம்பந்தன் மாறினார். ஆனால், அதற்குப் பின்னரான விடயங்கள், அவற்றை அவர் எவ்வாறு கையாண்டார் என்பதெல்லாம் ஆராயப்பட வேண்டியவை. என்னுடைய பார்வையில் அவர் தமிழ் மக்களை ஏமாற்றினார் என்பதைத் தாண்டி அவர் என்ன செய்தார்? அவை போதாமல் இருந்தது. பொங்கலுக்குத் தீர்வு வரும், தீபாவளிக்குத் தீர்வு வரும் என்றொல்லாம் சொல்லி தமிழ் மக்களை ஏமாற்றினார் என்ற குற்றச்சாட்டு உள்ளது.*

*2009 இல் 22 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஒற்றுமையாக – பலமாக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று சின்னாபின்னமாகியிருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போது இல்லை. அதேபோல அவரது தலைமையிலிருந்த தமிழரசுக் கட்சியும் இரண்டு தலைமைகளின் கீழ் சிதறண்டு போயுள்ளது. இவ்வாறான ஒரு நிலையில்தான் அவர் தமிழர் அரசியலிலிருந்து பிரிந்திருக்கின்றார். இனிவரும் தலைவர்கள் இதனை எவ்வாறு ஒருங்கிணைந்துகொண்டு செல்லப்போகின்றார்கள், தமிழ் அரசியலை எவ்வாறு ஒரு குடையின் கீழ் கொண்டுவரப்போகின்றார்கள் என்ற கேள்வி உருவாகியிருக்கின்றது.*

**தமிழரசுக் கட்சியில் அவர் எந்த ஒரு பதவியையும் இறுதிக் காலத்தில் வகிக்கவில்லை. ஆனால், தமிழரசுக் கட்சியைக் கட்டுப்படுத்தக்கூடிய ஒருவராக இருந்தார். இப்போது, இரண்டு தலைமைகளின் கீழ் பிளவுபட்டுப்போயிருக்கின்ற தமிழரசுக் கட்சி சம்பந்தனுடைய மறைவால் எவ்வாறான நெருக்கடியை எதிர்கொள்ளும்?**

*அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரையில் தலைமைகளைக் கொண்ட கட்டமைப்பு இருக்க முடியாது. தமிழ்நாட்டிலும் அவ்வாறான ஒரு தலைமை தோல்வியைத் தழுவியிருந்தது. அரசியல் கட்சிகள் ஒரு தலைமையின் கீழ் கட்டுக்கோப்பாக இருக்க வேண்டும். அந்த வகையில், சம்பந்தனின் மூப்பு, அவரது அரசியல் அனுபவம் என்பன அவருக்கு சாதகமான ஒரு தன்மையை வழங்கியிருந்தது. அதனால், எவரையும் கட்டுப்படுத்தக் கூடிய ஒரு தலைமைத்துவத்தை அவர் கட்சிக்குக் கொடுத்திருந்தார். அவரை மீறி நடக்கும் நிலைமையில் அவருக்கு கீழ் இருந்தவர்கள் இருக்கவில்லை.*

*ஆனால், இன்று அவ்வாறான நிலை இல்லை. ஒருவரை ஒருவர் எதிர்க்கின்ற நிலைமை தமிழரசுக் கட்சியில் இருக்கின்றது. அந்த நிலைமை தமிழ் மக்களுக்கு சாதகமாக இருக்காது. ஏனென்றால், இரட்டைத் தலைமையின் கீழ் தமிழ் அரசியல் செல்லாது. அது சாத்தியமானதுமல்ல. அவ்வாறு முரண்பட்டு நிற்பது தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கப் பாதகமானது.*

**2009 க்குப் பின்னர் தமிழ் அரசியலின் தலைமை சம்பந்தனிடம்தான் இருந்தது. அதேவேளையில், சிங்கள அரசியல் தலைவர்கள் மத்தியிலும் அவருக்கு செல்வாக்கு இருந்தது. இராஜதந்திரிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒருவராக அவர் இருந்தார். இந்த நிலையைப் பயன்படுத்தி இன நெருக்கடிக்கு உறுதியான தீர்வு ஒன்றைக் காண்பதற்கான வாய்ப்பை அவர் தவறவிட்டுவிட்டார் என்று சொல்ல முடியுமா?**

*தந்தை செல்வாவும் இரண்டு ஒப்பந்தங்களைச் செய்தார். ஆனால், தந்தை செல்வா தோல்வியடைந்தாரா அல்லது சிங்கள அரசியல் தலைவர்களால் தோற்கடிக்கப்பட்டாரா என்ற விடயங்கள் உள்ளன. அதனால், சம்பந்தனுக்கும் தெரிந்திருக்கக்கூடும், தன்னுடைய வாழ்நாளில் இதற்கான தீர்வு ஒன்றைப் பெற்றுக்கொள்ள முடியாது என்பது. ஆனால், தேர்தல்களை சந்திக்க வேண்டிய கட்டங்களில் அவர் சொல்வது பொய்கள் என்பது அவருக்கே தெரிந்திருக்கும். பொங்கலுக்குத் தீர்வு, தீபாவளிக்குத் தீர்வு என்று அவர் சொன்னவை அனைத்தும் பொய்கள் என்று அவருக்கே தெரிந்திருக்கும். ஏனென்றால், அவ்வாறு தீர்வுகளைக் காண முடியாது.*

*அவர் எவ்வாறான சந்தர்ப்பங்களை தீர்வை நோக்கி நகர்த்தினார் என்பதிலும் பலருக்கும் கேள்விகள் இருக்கும். உதாரணமாக மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக வந்த போது தீர்வை*

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# சிங்களவர்களிடம் தோல்வியடைந்த தலைவராகவே



# சம்பந்தனை தமிழர்கள் பார்க்கின்றனர்

மட்டு.நகரான்

வடகிழக்கில் தமிழ் தேசிய அரசியலில் நிலை எவ்வாறு உள்ளது என்பது சம்பந்தர் ஐயாவின் மறைவுக்கு பின்னர் தெளிவாகி வருகின்றது. கடந்த 35வருடத்திற்கு மேலாக தமது தாயகத்திற்காக போராடிய இனத்தின் நிலைமை இன்று எவ்வாறு இருக்கின்றது என்பதை அவரின் மறைவுக்கு பின்னரான செயற்பாடுகள் வெளிப் படுத்திவருகின்றது.



தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவராக வும் தமிழரசுக்கட்சியின் தலைவராகவும் பாராளு மன்றத்தில் எதிர்க்கட்சி தலைவராகவும் பாராளு மன்ற உறுப்பினராகவும் இருந்து பல்வேறு விமர்சனங்களுக்கு அப்பால் செயற்பட்ட ஒரு வராக சம்பந்தர் அவர்கள் நோக்கப்படுகின்றார். தமிழ் தேசிய அரசியலை பொறுத்த வரை பல் வேறு விமர்சனங்கள் அவர் மீது எழுந்தாலும் தமிழர்களுக்கான தீர்வு விடயத்தில் தொடர்ச்சியாக குரல்கொடுத்துவந்த ஒருவராக அவரை நோக்க வேண்டிய நிலையில் தமிழர் சமூகம் இருக்கின்றது.

ஆயுத ரீதியான போராட்டங்கள் ஒரு பகுதியாக நடைபெற்றுக்கொண்டிருந்தபோது அரசியல் ரீதியான போராட்டங்களை முன்னெடுப் பதற்காக தமிழீழ விடுதலைப்புலிகள் தலைவரி னால் முன்கொண்டுசெல்பவராக சம்பந்தர் அவர் கள் இருந்திருக்கின்றார்.



தமிழீழ விடுதலைப்புலிகளின் துரோகிகள் பட்டியலில் இருந்தவரை தேசிய தலைவர் அரசியல் ரீதியான போராட்டத்திற்கு தலைமை ஏற்கும் நிலைக்கு கொண்டுசென்றார் என்றால் அது சம்பந்தர் அவர்களின் திறமையும் அவரின் ஆற்றலுமே காரணமாக அமைந்திருந்தன.

சிங்கள பெரும்பான்மை சமூகம் இந்த நாட்டில் தமிழர்களுக்கு தீர்வினை வழங்கும் செயற்பாடுகளுக்காக தமிழ் தலைமைகளை தொடர்ச்சியாக ஏமாற்றிவரும் சூழ்நிலையே காணப்படுகின்றது.



இந்த வரிசையில் தொடர்ச்சியாக சிங்கள பேரினவாத அரசுகளினால் சம்பந்தர் அவர்கள் மட்டுமல்ல விடுதலைப்புலிகளும் ஏமாற்றப் பட்டே வந்தனர். தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சம்பந்தர் ஐயாவினை ஒப்பிடமுடியாவிட்டாலும் ஏதோவொரு வகையில் சம்பந்தர் அவர்களை விடுதலைப்புலிகள் தெரிவுசெய்ததன் காரணமாக அவர்களின் நோக்கம் வீணான விடயங்கள் என் பதை நாங்கள் சொல்லமுடியாது.

இலங்கை அரசியல் வரலாற்றில் 91வயதில் அரசியல்செய்து இறுதி வரையில் தமிழர் களுக்கான தீர்வு விடயத்தில் உறுதியாகயிருந்து மரணித்த ஒருவருக்கு வடகிழக்கு தமிழ் மக்கள் உணர்வுரீதியான அஞ்சலியை செலுத்த வில்லையென்ற கவலை இன்று அனைவருக்கும் எழுந்திருக்கின்றது.இன்று வடகிழக்கில் ஒரு இடத்தில் கூட சம்பந்தன் ஐயாவின் மரணத்திற்கான அனுதாப கொடிகளை காணமுடியவில்லை. இலங்கை தமிழரசுக்கட்சியின் பதாகைகளை தவிர வேறு பதாகைகளை கிழக்கில் எங்கும் காண முடியவில்லை.



கிழக்கு மாகாணத்தின் தமிழ் அரசியல் தலைமையாக தமிழ் தேசியத்தின் தலைமகனாக சம்பந்தர் ஐயாவினை கருதினாலும் தமிழ் மக்களைப்பொறுத்த வரையில் சிங்களவர்களிடம் தோல்வி அடைந்த ஒரு அரசியல் தலைவராகவே நோக்கவேண்டிய நிலையில் உள்ளது. காலம் காலமாக தமிழ் அரசியல் தலைவர்களை ஏமாற்றி தமது செல்வாக்கினை நிலைநிறுத்தும் செயற் பாடுகளை சிங்கள பேரினவாத சக்திகள் சிறப்பாக செயற்படுத்திவருகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் காலத்தில் மட்டும் அவ்வாறான செயற்பாடுகளை செய்ய முடியாத சிங்கள பேரினவாதம் இன்று அதனை சிறப்பாக செய்துவருகின்றது என்பதற்கான சான் றாக சம்பந்தன் ஐயாவின் இறப்பு இருக்கின்றது.

வடகிழக்கு இணைந்த தாயகத்தில் சமஸ்டியுடன் கூடிய தீர்வு தமிழர்களுக்கு வழங்கப்பட்டு அவர்கள் தமது பகுதிகளில் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் வாழவேண்டும் என்ற நிலைப்பாட்டினை சாகும் வரையில் சம்பந்தர் கொண்டிருந்தார்.அதற்காக சிங்கள சமூகத்துடன் நாங்கள் இணங்கிச்செல்லவே ண்டும்,அவர்களுக்கு எங்களது நிலைமையை வெளிப்படுத்தவேண்டும், அவர்கள் எங்களை நம்பி எங்களுக்கான தீர்வினை தரவேண்டும் என்று இறுதிவரையில் நம்பியிருந்தார். அவரது நம்பிக்கையினை இலங்கையினை ஆட்சி செய்த 08 சிங்கள பேரினவாத தலைவர்களும் நிராகரித்தே வந்திருக்கின்றார்கள்.



அண்மையில் தமிழ் தேசிய கூட்டமைப் பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் அவர்கள் ஒரு கருத்தினை தெரிவித்திருந்தார். “சம்பந்தர் ஐயா தமிழர்களின் இனப்பிரச்சினை தொடர்பில் இந்த நாட்டில எட்டு ஜனாதிபதிகளுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்திருந்தார். தமிழீழ விடுதலைப்புலிகள் காலத்தில் ஐந்து ஜனாதிபதிகளுடனுமும் முள்ளிவாய்க்காலுக்கு பின்னர் மூன்று ஜனாதிபதி களுடனும் தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண பேசியிருக்கின்றார்.

தமிழர்களின் பிரச்சினைக்கு சமஸ்டி அடிப்படையிலான தீர்வு வழங்கவேண்டும் என்ற பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து அதில்

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

# கை கழுவப்படும் பெருந்தோட்ட சமூகம்

துரைசாமி நடராஜா

இலங்கையில், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள இழுபறி நிலை இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இந்நிலையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்குமாறு அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட வர்த்தமானிக்கு எதிராக முதலாளிமார் சம்மேளனத்தினால் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால தடையை நீக்கி உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இதன் சாதக விளைவுகளை பொறுத்திருந்தே பார்க்க வேண்டியுள்ளது.




இதனிடையே 'நாட்கூலிகள்' என்ற வரையறைக்குள் முடங்கிப்போயுள்ள தொழிலாளர்களை அதிலிருந்தும் மீட்டெடுத்து சிறுதோட்ட உரிமையாளர்கள் என்ற அந்தஸ்தினை ஏற்படுத்த வேண்டும் என்ற அழுத்தங்கள் அதிகரித்து வருகின்றன. இந்நிலையானது எதிர்காலத்தில் பெருந்தோட்ட சமூகம் நிலவுடைமைச் சமூகமாக மாற்றம் பெறுவதற்கு அடிப்படையாக அமையுமென்றும் கருத்து வெளிப்பாடுகள் இருந்து வருகின்றன.

பெருந்தோட்ட மக்கள் இந்நாட்டில் தனித்துவமான சமூகமாக இருந்து நாட்டின் எழுச்சிக்கு அர்ப்பணிப்பான சேவையினை வழங்கி வருகின்றனர். தாம் இருளில் இருந்த போதும் நாட்டினை ஒளியேற்ற அவர்கள் தவறவில்லை. எனினும் அவர்களின் அர்ப்பணிப்பான சேவைகளுக்கு எந்தளவு அங்கீகாரம் கிடைக்கின்றது? அம்மக்களின் எழுச்சிக்கு ஆட்சியாளர்கள் எவ்வித கரிசனையுடன் செயற்படுகின்றனர்? என்பதெல்லாம் கேள்விக்குரிய ஒரு விடயமாகவே உள்ளது. தமிழகத்திலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டில் அழைத்து வரப்பட்ட இம்மக்கள் பரம்பரையினர் 'இந்நாட்டின் பிரஜைகள்' என்ற அந்தஸ்தினைப் பெற்ற பின்னரும் கூட அந்நியர்களாகவே நோக்கப்படும் விடயம் மிகவும் விசனத்திற்குரியதாகும்.

ஆட்சியாளர்களின் சில முன்னெடுப்புக்களை நோக்கும்போது 'இலங்கையர்' என்ற பொதுவரையறைக்குள் உள்ளீர்க்கப்படாது காரிய மாற்றப்படுவதனை எம்மால் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.



பெருந்தோட்ட மக்களை தேர்தல் காலங்களில் இரத்தத்தின் இரத்தங்களாக கருதும் பெரும்பான்மை கட்சிகள், ஆட்சிபீடமேறியதும் அனைத்தையும் மறந்து செயற்படுவதும் பின்னர் அவர்களை கைகழுவி விடுவதும் புதிய விடயமல்ல. இத்தகைய தழும்புகள் அதிகமாகவே மலையக வரலாற்றில் காணப்படுகின்றன. இதேவேளை இத்தகைய போக்குகள் இன்னும் மாறியதாக இல்லை.

தொடர்ந்தும் வாக்குறுதிகளால் மட்டுமே இம்மக்களை திருப்திப்படுத்த முனையும் கலாசாரத்திற்கு இன்னும் பஞ்சமில்லை என்றே கூறலாம். தேர்தல் விஞ்ஞாபனம், வரவு செலவு திட்ட முன்மொழிவுகள் இவற்றிலெல்லாம் இம்மக்களின் வீடமைப்பு, கல்வி அபிவிருத்தி, இளைஞர் மேம்பாடு, சம்பள உயர்வு போன்ற பல்வேறு நலன்சார் வாக்குறுதிகள் இடம் பெற்றிருக்கின்றன. எனினும் இதில் எத்தனை வாக்குறுதிகள் செயல்வடிவம் பெற்றிருக்கின்றன என்பது குறித்து நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

இதேபாணியில் இப்போதும் ஆட்சியாளர்கள் பல்வேறு வாக்குறுதிகளையும் வழங்கி வருகின்றனர். எனினும் இதன் நம்பகத்தன்மை தொடர்பில் பொறுத்திருந்தே பார்க்க வேண்டியுள்ளது.

**நொண்டிச் சாட்டு**

பெருந்தோட்ட மக்கள் 'அட்டைக்கு இரத்த தானம் செய்து வயிற்றுக்கு அன்னதானம்' தேடி வருகின்றனர். உழைப்பின் உச்சத்தை தொட்ட இம்மக்கள் உழைப்பிற்கேற்ற ஊதியமின்றியுள்ளதோடு, கையளவு நிலமேனும் சொந்தமாக இல்லாத நிலையில் வாழ்க்கையினை கடத்திக் கொண்டிருக்கின்றனர். உக்கிரமான வறுமை இவர்களை ஆட்டிப்படைக்கின்ற நிலையில் உழைப்புக்கேற்ற சம்பளத்தை வழங்குவதற்கு கம்பனியினர் உடன்படுவதாக இல்லை. சர்வதேச சந்தையில் தேயிலையின் விலையில் வீழ்ச்சி, உற்பத்திச் செலவு அதிகரிப்பு என்று ஆயிரம் நொண்டிச் சாட்டுக்களை கம்பனியினர் தெரிவித்து சம்பள உயர்வுக்கு மறுப்பு தெரிவித்து வருகின்றனர். இது ஒரு உரிமை மீறலாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது.



இம்முறை 1700 ரூபா சம்பள அதிகரிப்பு கோரிக்கையின்போதும் இதுவே நடந்தேறி இருக்கின்றது. 'உற்பத்திச் செலவு மற்றும் வருமானம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே சம்பள உயர்வை வழங்க முடியும். அடிப்படை சம்பளத்தை 200 ரூபாவால் அதிகரித்து, நாளாந்த மொத்த சம்பளமாக 1380 ரூபாவை வழங்குவதற்கான யோசனை முன்வைக்கப்பட்டது.

எனினும் அரசாங்கமும், பெருந்தோட்டத் தொழிற்சங்கங்களும் அதனை நிராகரித்துள்ளன. உற்பத்தித்திறன் மற்றும் வருமானத்துடன் இணைக்கப்பட்ட சம்பள மாதிரியை அல்லது தொழிலாளர்களின் கொடுப்பனவுகளை உற்பத்தித்திறன் மற்றும் வருமானத்துடன் இணைக்கும் வருவாய் பகிர்வு மாதிரியை நாம் முன்மொழிந்துள்ளோம். எனினும் அந்த முன்மொழிவும் நிராகரிக்கப்பட்டுள்ளது' என்று கூறும் கம்பெனிகள் தொழிலாளர்களுக்கு 1700 ரூபா வழங்க முடியுமென்றால் அரசாங்கத்தின் நிர்வாகத்தின் கீழுள்ள தோட்டங்கள் அதனை செய்து காண்பிக்கட்டும் என்றும் சவால் விடுத்து வருகின்றன.




ஆட்சியாளர்களால் எடுக்கப்பட்ட தான்தோன்றித்தனமான சில முடிவுகளாலேயே இன்று பெருந்தோட்டங்களுக்கு இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ள சிரேஷ்ட தேயிலை ஏற்றுமதியாளர் அன்ஸ்லம் பெரேரா, முட்டாள்தனமான தீர்மானம் என்றும் இதனை விமர்சித்திருக்கின்றார். இவ்வாறாக அரசாங்கம், கம்பெனிகள், தொழிற்சங்கங்கள் என்று மூன்று தரப்பினர்களின் வாதப்பிரதிவாதங்களுக்கு இடையில் நசுக்கப்படும் தோட்டத் தொழிலாளர்கள் உரிய வாழ்வாதாரமின்றி அல்லல்படுகின்றனர்.



நாட்கூலிகளான பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மாதச்சம்பள முறைமைக்குள் உள்ளீர்க்கப்பட வேண்டும் என்ற கோஷங்கள் முன்னதாக மேலெழுந்தன. கடந்தகாலத்தில் மேதினங்களின் கருப்பொருளாகக்கூட இது எதிரொலித்தது. எனினும் இந்த நிலை இப்போது மாறி பெருந்தோட்டத் தொழிலாளர்களை சிறுதோட்ட உடைமையாளர்களாக மாற்றியமைக்கவேண்டுமென்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையானது தொழிலாளர்கள் அதிகரித்த வருமானத்தைப் பெற்றுக் கொள்ள உந்துசக்தியாக அமைவதோடு எதிர்காலத்தில் அவர்களின் நிலவுடைமைக் கனவும் சாத்தியமாகும் வாய்ப்புள்ளது என்றும் வலியுறுத்தல்கள் உள்ளன.

**காணிச் சீர்திருத்தம்**

இந்நிலையில் சம்பள முன்மொழிவுகள் தற்கால

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# நோர்டிக் நாடுகளும் வியக்க வைக்கும் சமூக அமைப்பும்!

**பாகம் 3**

உலகின் தலைச்சிறந்தக் கல்விக் கொடுக்கும் நாடுகளின் முதன்மை பட்டியலில் ஃபின்லாந்து உள்ளதென்பதை பல தரவுகள், ஆய்வறிக்கைகள் என அனைவருக்கும் தெரிந்த செய்தி! ஃபின்லாந்து மட்டுமல்ல, நோர்வே, சுவீடன், டென்மார்க் நாடுகளின் பள்ளிக்கல்வித்துறை உலகத்தின் ஏனைய நாடுகளை ஒப்பிடுகையில் பல்வேறு கூறுகளின் அடிப்படையில் முதன்மை பெறுகிறது. நாம் அனைவரும் கற்றுக்கொள்ள ஏராளமாக உள்ளது!



அனைவருக்கும் கல்வி! அனைவருக்கும் சம வாய்ப்புள்ள கல்விக்கற்றல் திட்டங்களும் கல்விக்கற்றல் தொழிற்நுட்பங்களும் கொண்ட சமத்துவக் கல்வி! பள்ளியில் அனைவருக்கும் சமமான உணவு! – இதுவே இந்த நாடுகளின் கல்வித்துறைகளின் பொதுத்தன்மையாக இருந்து வந்துள்ளது. அதாவது, சமூகநீதி, சமூக ஒருங்கிணைப்பு, சமூகநலத்திட்டங்கள், சமத்துவம் (social justice, inclusion, welfare schemes, equality) ஆகிய கோட்பாடுகளை கல்வித்துறையின் செயற்பாடுகளில் முழுமையாகக் கடைப்பிடிக்கும் நாடுகள் இவை எனலாம்.

அதேபோல, இந்நாடுகளின் கல்வித்துறையில் நாம் ஆழமாகக் கற்க வேண்டிய கோட்பாடுகள்,

***1) தாய்மொழிக் கல்வி,***
***2) சமூகநீதி,***
***3) அதிகாரப்பரவலாக்கம்***
***4) கல்வியியல் கோட்பாடுகள்,***
***5) பாலினச்சமத்துவம் – கல்வித்துறையிலும் சமூக வளர்ச்சியிலும்!***

இவர்களின் வெற்றியில் மிக முக்கியப் பங்காற்றும் இரண்டு காரணிகளாக 1) தொடக்கக்கல்வியும் 2) ஆசிரியர் பயிற்சிக் கல்வியும் என வரையறுக்கலாம்.



வெற்றிகரமான கல்வித்துறைச் செயற்பாடுகளுக்குஆசிரியர்களேமுக்கியப்பங்காற்றுபவர்கள், அவர்களை பன்னாட்டுக் கல்விக் கோட்பாடுகள் ‘Agents of Change’ என்று குறிப்பிடும். அனைவரையும் உள்ளடக்குதல், சமூகநீதி (Inclusions and Social Justice) வகுப்பறைகள் குறித்தானப் புரிதல்களை ஆசிரியர் பயிற்சிக் கல்வியில் சேர்க்கும் பொழுதே அத்தகைய Agents (இயற்றிகள், முகவர்கள்) வெற்றிகரமான வகுப்பறைகளை உருவாக்குவர் என்பது இந்நாடுகளின் கோட்பாடுகளில் ஒன்று.



முனைவர் விஜய் அசோகன்,
கல்வியாளர்

மேற்கூறிய சமத்துவம், சமூகநலன், தாய்மொழிக்கல்வி தொடர்பாக ஃபின்லாந்து, சுவீடன், நோர்வே, டென்மார்க் நாடுகள் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் எத்தகைய மாற்றத்தினை ஏற்படுத்தினார்கள்? ஏன் மாற்றியமைத்தார்கள்? அதற்குரிய அரசியல் மற்றும் சமூகச் சூழல் என்னவாக அமைந்திருந்தது? கல்வித்துறையின் செயற்பாட்டு மாற்றங்களில் பொதுவுடமைத் தத்துவங்களின் பங்கு என்னவாக இருந்தன? கல்வித்துறையின் பங்களிப்பை தேசிய மறுமலர்ச்சிக்கும் பொருளாதார மறுமலர்ச்சிக்குமானஅடிப்படைத்தத்துவமாகஎவ்வாறுபிணைத்து வழிநடத்தினார்கள்? போன்ற கேள்விகளூடாகவே இந்நூலின் அடுத்தடுத்த பகுதிகள் விரிவடையும். ஆம்!, மிக முக்கியமாக இந்நாடுகளின் பள்ளிக் கல்வித்துறையின் மாற்றங்களும் பரிணாம வளர்ச்சியும், ஒவ்வொரு காலக்கட்டத்திலும் வரலாற்றுச் சூழல்களுக்கு ஏற்பவும் நவீன வடிவங்களுக்கு ஏற்பவும் தொடர்ந்தும் மாற்றியமைத்த செயற்திட்டங்களை ஆழமாக நாம் தெரிந்துக்கொள்வது அவசியமாகிறது!

அதனினும் முக்கியமாக, இந்த நாடுகள் கல்வித்துறையின் புதுத்தன்மையின் வழியாக மட்டும் உலகத்தை ஈர்க்கவில்லை, உலகின் பல முன்னணிப் பட்டியலில் இடம் பெற்று ஒவ்வொரு ஆண்டும் நாம் ஆச்சர்யமாகவும், ஏக்கமாகவும் பார்க்கும் செய்திகளின் வழியாக நாம் அடிக்கடி கேள்விப்படும் நாடுகளின் பட்டியல்களிலும் இதே ஃபின்லாந்து, நோர்வே, சுவீடன், டென்மார்க் இருக்கிறது அல்லவா?

**உலகின் முன்னணிப் பட்டியல்:**

கல்வித்துறையின் வெற்றிக்கரமான செயற்பாடுகளை, அந்நாட்டின் சமூக மேம்பாட்டுக் குறியீடுகள், மனிதவள மேம்பாட்டுத் தரவுகள், சமூக நல்லிணக்கம், சமூக ஒற்றுமைகள், சமூகத்தின் அமைதி மற்றும் மகிழ்ச்சியின் அளவீடுகள், தனி மனித சுதந்திரம் வழியாகவே முழுமையாக அளவிட முடியும். எனில், மேற்கூறிய நாடுகளின் கல்வித்துறையை நாம் முழுமையாக அலசி ஆராய வேண்டியதன் அவசியம் கீழ் வரும் செய்திகளின் வழியாக முதன்மை பெறுகிறது எனலாம்.



உலகின் மகிழ்வான நாடுகளில் முதல் 10 நாடுகளைக் கணக்கிட்டால், ஃபின்லாந்து, டென்மார்க், நோர்வே, சுவீடன் ஐசுலாந்து ஆகியவை கட்டாயம் இடம்பெற்று இருக்கும். FORBES வெளியிட்ட 2022ஆம் ஆண்டிற்கான மகிழ்ச்சிகரமான நாடுகளின் பட்டியலில், ஃபின்லாந்து முதல் இடம், டென்மார்க் இரண்டாம் இடம், ஐசுலாந்து மூன்றாம் இடம், சுவீடன் ஏழாம் இடம், நோர்வே எட்டாம் இடம் என இந்த நாடுகளே முன்னணியில் இருந்தன.
*(https://www.forbes.com/sites/laurabegley-bloom/2022/03/18/ranked-the-20-happiest-countries-in-the-world-in-2022/?sh=5c45e1a235d5)*

FORBES வெளியிட்ட 2021ஆம் ஆண்டிற்கான மகிழ்ச்சிகரமான நாடுகளின் பட்டியலில், ஃபின்லாந்து முதல் இடம், ஐசுலாந்து இரண்டாம் இடம், டென்மார்க் மூன்றாம் இடம், சுவீடன் ஆறாம் இடம், நோர்வே எட்டாம் இடம் பெற்றிருந்தன.

**ஒவ்வொரு ஆண்டின் கணக்குமே இதுதான்!**

ஒவ்வொரு நாட்டின் குடிமக்களின் சராசரி ஆயுட்காலம், பள்ளிக்கல்வி நிறைவு விகிதம், குடிமக்கள் சராசரி வருவாய், ஆகியவைகளின் அடிப்படையில் கணக்கிடப்படும் மனிதவள மேம்பாட்டுக் குறியீடு (Human Development Index) அளவுகோலிலும் நோர்வே இரண்டாம் இடத்தினையும், ஐசுலாந்து மூன்றாம் இடத்தினையும், டென்மார்க் ஆறாம் இடத்தினையும், ஃபின்லாந்து 11ஆம் இடத்தினை யும் பெற்று இருந்தன.
*(https://hdr.undp.org/data-center/country-insights#/ranks)*

Freedomhouse வெளியிட்டப் பட்டியலின் படி, வாக்களிக்கும் ஜனநாயக உரிமை, கருத்துச் சுதந்திரம், சட்டத்தின் அளவுகோலில் குடிமக்களுக்கு இருக்கும் சமத்துவ உரிமை ஆகியவைகளின் அடிப்படையிலான தனிமனிதச் சுதந்திரச் செயற்பாடுகளின் தரவரிசையில், நோர்வே முதலாம் இடமும், ஃபின்லாந்து இரண்டாம் இடமும், சுவீடன் மூன்றாம் இடமும் டென்மார்க் ஆறாம் இடமும் ஐசுலாந்து 17ஆம் இடத்திலும் முன்னனிப் பெற்றிருந்தன.
*(https://freedomhouse.org/countries/freedom-world/scores?sort=desc&order=Total%20Score%20and%20Status)*



Fraser Institute வெளியிட்டு இருந்த, 2018-2019ற்கான தனிமனிதச் சுதந்திர அளவுகோலின் அடிப்படையில், டென்மார்க் மூன்றாம் இடமும், ஃபின்லாந்து ஆறாம் இடமும் சுவீடன் 8ஆம் இடமும் ஐசுலாந்து 12ஆம் இடமும் நோர்வே 13ஆம் இடமும் பெற்றிருந்தன.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# போலியான, மீளமுடியாத நடைமுறையாக மாற்றம் பெறும் மேற்குலகின் தேர்தல் முறை

ஆர்த்தீகன்

அதிகாரத்திலிருந்து நீக்க முடியாத தனது ஆளுமையை தக்கவைக்கும் அரசியல் தலைவர்களை அல்லது கட்சிகளைக் கொண்ட ஒரு நிலையை நோக்கி உலகம் நகர்ந்து வருகின்றது. இந்த நிலையை நோக்கி தற்போது தாராளவாத கொள்கையுடையவர்கள் என்ற மேற்குலகமும் நகர்ந்து வருகின்றது.



அதாவது முன்னனி மேற்குலக நாடுகளின் அரசியல் நடைமுறை தற்போது மிகப்பெரும் நெருக்கடிகளை சந்தித்து வருகின்றன. இது மிகப்பெரும் நெருக்கடிக்கான ஆரம்ப அறிகுறியாக தென்படுகின்றது. அதாவது எதிர்வரும் காலங்களில் மிகப்பெரும் நெருக்கடிகளை மேற்குலக அரசியல் தளம் எதிர்கொள்ளப்போகின்றது.

இரண்டாவது உலகப்போருக்கு பின்னர் இது இடம்பெறுவது முதலாவது முறையல்ல.1960 மற்றும் 1970 களிலும் இவ்வாறான நெருக்கடிகள் நிகழ்ந்திருந்தன. ஆனால் தற்போது நிகழ்ந்துவரும் அரசியல் மாற்றம் என்பது தேர்தல் முறைமைகள் உட்பட உலக நிறுவனங்களில் மிகப்பெரும் மாற்றங்களை ஏற்படுத்தும் நிலையை நோக்கி நகாந்து வருகின்றது.

தமது தேர்தல்கள் ஜனநாயகவழிகளில் நேர்மையாக இடம்பெறுவதாக மேற்குலக ஊடகங்கள் எம்மை நம்பவைக்கின்றன. மக்கள் ஆதரவுகள் இருந்தால் தமது திட்டங்களுடன் யாரும் பதவிக்கு வரலாம் என்பது போன்ற பாவனை அது. ஆனால் உண்மை அதுவல்ல. மிகப்பெரும் மாற்றங்களுடன் எந்தவொரு நாடும் இயங்க முடியாது.

உண்மையில் இந்த தேர்தல்கள் என்பது இறுதியான சட்டபூர்வ நடவடிக்கை மட்டுமே அல்லது ஆளும் வர்க்கத்தின் ஒரு நீண்ட தெரிவுமுறைக்கு பின்னர் மக்களின் அங்கீகாரத்தைப் பெறும் ஒரு சடங்கு.




உண்மையான உலக நடைமுறை என்னவெனில் ஒரு நாடு தவறான பதையில் செல்லும்போது அது தேர்தலில் எதிரொலிக்கும். அதன் பின் புதியவர்கள் புதிய அரசியல் திட்டங்களுடன் களமிறங்குவார்கள். நாடு பின்னடைவில் இருந்து மீண்டு முன்னேற்றப்பாதையில் செல்லும். ஒரு ஆக்கபூர்வமான சமூகம் உறுதிதன்மையையும், எதிர்காலம் தொடர்பான கணிப்புக்களையும் சரியாக பேணும் அங்கு தற்பெருமை பேசுபவர்களும், கடும்போக்காளர்களும் பதவிக்கு வர முடியாது.

ஆனால் அரசியல் முறமை என்பது தன்னை பாதுகாத்துக் கொள்வதில் தான் கவனம் செலுத்துகின்றது. அதாவது அது புதியவர்களை உள்வாங்குவதற்கு அல்லது புது இரத்தம் பாச்சுவதை விரும்புவதில்லை. அதன் பலன் என்னவெனில் ஒரு அடிப்படைவாத அரசியல் கொள்கை முதிர்ச்சியடைந்து மீண்டும் மீண்டும் நடைமுறைக்குவரும் பொறிமுறையாக மாறிவிடுகின்றது.

மக்களிடம் அவநம்பிக்கைகள் வளர்ச்சியடைந்து காலங்கள் நகரும்போது அது மக்களிடம் ஒரு எதிர்ப்பு அலையை தோற்றுவிக்கின்றது. இந்த அலை ஓங்கும்போது அது அதிகாரத்தை கைப்பற்றிவிடுகின்றது. அதாவது இடதுசாரியோ அல்லது வலதுசாரியோ இவை இரண்டுக்குமான முதல் அறிகுறி சமுகங்களிடம் தோன்றும் பிரச்சனைகள் தான்.

பனிப்போர் காலத்தின் பின்னர் இந்த நிலமை மேற்குலகத்தில் காணப்படுகின்றது. கடந்த 30 தொடக்கம் 40 வருடங்களில் மேற்குலக நாடுகளில் இடம்பெறும் தேர்தல்கள் போலியானதாக மாற்றம் பெற்றுவருகின்றன. சோவியத்தின் முறையுடன் ஒப்பிடும்போது இது மிகவும் முறைகேடாக தெரியாவிட்டாலும் அவர்களிடம் இருக்கும் போட்டிகள் வேறு தெரிவுகளுக்கானதாக இருப்பதில்லை.




அதாவது தற்போது மேற்குலக எல்லா அரசியல் தலைவர்களும் ஒரே நோக்கத்திற்காக செயற்படும் நிலையையே பார்க்க முடிகின்றது. சிறியளவு வலதுசாரியாக அல்லது இடதுசாரியாக இருப்பார்கள் ஆனால் அவர்களின் பொதுவான அரசியல் நோக்கம் ஒன்றாகத் தான் இருக்கும். அதாவது வாக்குகளிற்கு அங்கு பிரதிபலன்கள் கிடைப்பதில்லை.

பலவீனமான தேர்தல் முறை மக்களின் விமர்சனங்களை குறைத்துவிடுகின்றது. நாம் வாழும் சமூகத்தை நாம் அறிந்துகொள்வதில்லை என்ற சோவியத்தின் தலைவரான யூரி அன்ரோபோவ் கூறிய கருத்துக்களை மேற்குலகத்தின் அரசியல்வாதிகள் புரிந்துகொள்ளவேண்டும்.

நாம் செய்வது எல்லாம் சரிஎன்றே மேற்குலகம் கூறுகின்றது. ஆனால் ஒரு இனம்புரியாத சக்தி எம்மை அழுத்துகின்றது. எனவே நாம் ஒருங்கிணைய வேண்டும். ஜனநாயகத்திற்கு எதிரான சக்திகள் பதவிக்கு வருவதை தடுக்க வேண்டும்.


தாராளவாத உலகமயமாக்கல் மறைந்து வருகின்றது. மரபுரீதியான தேர்தல் முறையும் வீழ்ச்சிகண்டு வருகின்றது. இயக்கமற்ற அடிப்படை சமுதாய நடைமுறையை இயங்கவைப்பதை விடுத்து தற்போதைய அரசியல் அதனை மேலும் சிதைத்துவருகின்றது.



ஒரு அரசியலை அரசியல் இயந்திரத்தால் மாற்றீடு செய்யும்போது என்ன நிகழும் என் பதை ரஸ்யா அறியும். அது 1996களில் ரஸ்யாவில் இடம்பெற்றது. ஜென்னடி சுகனொவ் தலைமையிலான பொதுவுடமைக் கட்சி அரச தலைவர் பொறிஸ் ஜெல்சினுடன் மோதியது. பொதுவுடமை மீள்உருவாக்கம் புதிய சோவியத்து ரஸ்யாவை ஆட்கொண்டது.

அதேநிலை தான் தற்போது மேற்கலகம் சந்திக்கின்றது. பிரான்ஸின் தாராளவாதிகள் ஜெல்ஸினின் திட்டத்தையே தேர்தல் அறிக்கையில் மீண்டும் பிரசுரித்துள்ளனர். கடவுள் தடை என்பது அதன் தலைப்பு. அவர்களின் அமெரிக்க நண்பன் இயலாமையுள்ள வயதானவர் நாட்டை ஆட்சி செய்யனும் என விரும்புகிறான். எதிர்த்து போட்டியிடுபவர் மீது வழக்கும் போடுகின்றனர்.

1996 ஆம் ஆண்டு ஜெல்ஸின் வெற்றிபெற்றார் ஆனால் பின்னர் தன்னை தாழ்த்தாது புதியவரை நியமித்திருந்தார். அதன்மூலம் புதிய ரஸ்யாவுக்கான அரசியல் பலத்தை வழங்கியிருந்தார். ஆனால் அவரைப்போல் அல்லாது ஜோ பைடனும், இமானுவேல் மக்ரோனும் தோல்வியை தழுவமுற்பட்டு நிற்கின்றனர்.




ஜனநாயக் கட்சியினருக்கு பைடன் மீது நம்பிக்கையில்லா விட்டாலும் அவர்களிடம் வேறு திட்டங்கள் இல்லை. இறுதிநேரத்தில் பைடனை மாற்றுவது என்பது கட்சிக்குள் மிகப்பெரும் மோதலைத் தோற்றுவிக்கும். தேர்தல் முடிவுகளும் எதிர்பாராத விளைவுகளை ஏற்படுத்தலாம்.

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# ஹமாசைத் தோற்கடிக்க முடியாது
# திணறும் இஸ்ரேல்

தமிழில்: ஜெயந்திரன்

காஸாப் பிரதேசத்தில் போராடும் போராளிகளைத் தாம் விரைவில் தோற்கடித்துவிடுவோம் என்று மேற்கு ஜெரூசலம் சூளுரைத்திருக்கும் அதே வேளையில் காஸாவிலிருந்து வெளிவரும் தகவல்களோ நிலைமை அவ்வாறு இல்லை என்பதையே சுட்டிக் காட்டுகிறது.



ஹமாசுக்கும் அவர்களது கூட்டாளிகளுக்கும் சொந்தமான 32,000 இராணுவ இலக்குகளை ஏப்பிரல் மாதத்தின் இறுதி வரை இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகள் தாக்கியிருந்தன. ஹமாசைச் சேர்ந்த 15000 போராளிகளை தாம் கொன்றழித்துவிட்டதாக இஸ்ரேல் அரசு தெரிவித்திருந்தது. 2007ம் ஆண்டிலிருந்து காஸாப்பிரதேசத்தின் நிர்வாகத்தைத் தம் கைவசம் வைத்திருக்கின்ற இந்த இஸ்லாமியக் குழுவை இவ்வாறான நடவடிக்கைகளால் முற்றாகத் துடைத்தழிப்பது சாத்தியமில்லை என்று நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

“ஹமாஸ் என்ற பயங்கரவாத இராணுவத்தை அழித்தொழிக்கும் நடவடிக்கையின் இறுதிக்கட்டத்தை நோக்கி நாங்கள் முன்னேறிக் கொண்டிருக்கிறோம்” என்று இஸ்ரேலிய பிரதம மந்திரி நெத்தன்யாகு இஸ்ரேலிய தேசிய பாதுகாப்புக்கல்லூரியில் பயிலும் பயிற்சியாளர்கள் நடுவில் கடந்த திங்கட்கிழமை பேசும் போது தெரிவித்தார்.



“தரைக்கு மேலும் தரைக்குக் கீழும் நாம் ஏற்கனவே சாதித்துவிட்ட விடயங்கள் தொடர்பாகவும், விசேட பயிற்சிபெற்ற கொமாண்டோ வீரர்களின் சண்டையிடும் ஆர்வம் தொடர்பாகவும் நான் திருப்தியடைகிறேன். எமது பணயக் கைதிகளை மீட்டல், ஹமாசின் போராடும் மற்றும் அரசாளும் ஆற்றலை அழித்தொழித்தல், காஸா தொடர்ந்தும் எங்களுக்கு அச்சுறுத்தலாக அமைவதைத் தடுத்தல், போன்ற எங்கள் இலக்குகளை இவ்வாறான மனநிலை மூலம் நாங்கள் வெற்றிகொள்வோம்” என்று அவர் மேலும் தனது உரையில் தெரிவித்திருந்தார்.

2023ம் ஆண்டு, ஒக்ரோபர் 7ம் திகதி, ஏராளமான ஹமாஸ் போராளிகள் இஸ்ரேலைத் தாக்கி 1500க்கும் அதிகமான இஸ்ரேலியர்களைப் படுகொலை செய்திருந்தார்கள். அன்றிலிருந்து ஹமாஸ் போராளிகளது சுரங்கப் பாதைகள் பலவற்றை இஸ்ரேலிய படைகள் தாக்கியழித்திருக்கின்றன. ஹமாசுக்குச் சொந்தமான ஏராளமான ஆயுதக்கிடங்குகளையும் பணத்தையும் அவர்கள் கைப்பற்றியிருக்கிறார்கள். பல இராணுவ நிலைகளைத் தாக்கியழித்திருக்கிறார்கள். ஹமாஸ் மற்றும் பாலஸ்தீன இஸ்லாமிய ஜிகாத் குழுக்களுக்காக வேலை செய்பவர்களை கொன்றிருப்பது மட்டுமன்றி ஆயிரக்கணக்கானவர் களைக் கைதுசெய்தும் இருக்கிறார்கள்.

### வெற்றி தொலைதூரத்திலே

இஸ்ரேலிய படைகள் இவ்வளவான விடயங்களைச் சாதித்த பின்னரும் ஒன்பது மாதங்கள் கடந்திருக்கும் இத்தருணத்தில் வெற்றி அண்மையில் இருப்பதாகத் தெரியவில்லை.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 7ம் திகதி மேற்கொள்ளப்பட்ட மிகவும் பயங்கரமான தாக்குதலுக்கு முன்னர், 2007ம் ஆண்டிலிருந்து காஸாப் பிரதேசத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த ஹமாஸ் சண்டையில் ஈடுபடக்கூடிய 30,000 படைவீரர்களைக் கொண்ட 25 பட்டாலியன்களைத் தாம் கொண்டிருப்பதாக ஹமாஸ் தெரிவித்திருந்தது.



ஆனிமாதத்தின் இறுதியில், ஹமாசின் மொத்தப் போராளிகளில் அரைவாசியினரையே அதாவது 15,000 பேரை மட்டுமே தாம் கொன்றழித்திருப்பதாக இஸ்ரேலிய பாதுகாப்புப் படையினர் ஒப்புக்கொண்டிருந்தனர்.

காஸாவின் தெற்குப்புற நகரான றாவாவில் (Rafah) 900 போராளிகளைத் தாம் கொன்றுவிட்டதாக, கடந்த செவ்வாய்க்கிழமை மாலை, இஸ்ரேலிய நிர்வாகப் பணியாளர்களின் தலைவரான ஹேர்ஸி ஹலேவி தகவல் தெரிவித்திருந்தார்.

தமது சண்டைப்படையணிகளில் ஏற்கனவே கொல்லப்பட்ட வீரர்களை ஈடுசெய்யும் நோக்குடன், சண்டைக்கெனப் புதியவர்களை ஆட்சேர்க்கும் பணியில், ஹமாஸ் தற்போது மும்முரமாக ஈடுபட்டுவருகிறது. இவ்வாறாகப் புதிதாக இணைக்கப்படுபவர்களில் பெரும்பாலானோர் 18வயதுடையவர்கள். தமது ஆளணியைப் பொறுத்தவரையில், முன்னர் இருந்து எண்ணிக்கையை ஹமாசால் அடையமுடியாமல் போனாலும் கூட, இஸ்ரேலுடன் சரிக்குச் சரி போர் புரிவதற்கு ஹமாசிடம் தற்போதிருக்கும் போராளிகளின் எண்ணிக்கை போதுமானதாகும்.

கான் யூனிஸ் நகரத்திலிருந்து 20 ரொக்கெட்டுகளை, கடந்த திங்கட்கிழமை, இஸ்ரேலின் தென்புறத்தில் வாழும் சமூகங்கள் மேல் ஹமாஸ் ஏவியிருந்தது. தொடர்ந்து சண்டைக்களத்தில் தம்மால் தொடர்ந்து நீடிக்க முடியும் என்பதை இவ்வாறு ஹமாஸ் நிரூபித்திருக்கிறது. முன்னர் ஹமாஸ் போராளிகளின் பிரசன்னம் இல்லாதிருந்த இடங்களில், இப்போது மீண்டும் அவர்களது பிரசன்னம் தலைதூக்கத் தொடங்கியிருக்கிறது. காஸாப் பிரதேசத்தில் இஸ்ரேலிய சிப்பாய்கள் நாளாந்தம் தொடர்ச்சியாகக் கொல்லப்பட்டு வருகிறார்கள். இவ்வாறு கொல்லப்பட்ட இஸ்ரேலிய வீரர்களின் எண்ணிக்கை ஏற்கனவே 670 ஐத் தாண்டிவிட்டது.

“இஸ்ரேலால் ஹமாசை முற்றாக அழித்து விட முடியும் என்று நான் நினைக்கவில்லை” என்று போர் தொடங்க முன்பு காஸாவை விட்டு வெளியேறிய காஸாவை வதிவிடமாகக் கொண்ட அரசியல் ஆய்வாளரான ஷாடி அப்டெல்றஹமான் தெரிவித்தார்.

“மற்றக் குழுக்களைப் போல் ஹமாசை நாம் பார்க்க முடியாது. அவர்கள் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கென்று அவர்களது கொள்கை தொடர்பான ஒரு நோக்கம் இருக்கிறது. அவர்களது நோக்கம் தங்களது நாட்டுக்காகப் போராடுவது அல்லது கொல்லப்பட்ட தங்கள் உறவுகளைக் கொன்றவர்களைப் பழிவாங்குவது என்பதாகும்” என்று அவர் மேலும் கூறினார்.

காஸா மீதான இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை எதிர்க்கும் நோக்கத்துடனும், அந்த ஆக்கிரமிப்பை எதிர்க்கத் தவறிய பட்டா (Fatah) உள்ளிட்ட ஏனைய பாலஸ்தீனக்குழுக்களின் இயலாமைக்கு பதில் கொடுக்கும் நோகத்துடன், ‘பயங்கரவாதிகள்’ என்று பிரதேச சக்திகளாலும் பன்னாட்டுச் சக்திகளாலும் கருதப்படுகின்ற ஒரு தீவிரவாதக் குழுவான முஸ்லீம் சகோதரத்துவத்தை அடித்தளமாகக் கொண்டு, 1980 களின் இறுதியில் ஹமாஸ் போராட்டக்குழு தாபிக்கப்பட்டது, இஸ்ரேலை இராணுவ ரீதியாக எதிர்ப்பது மட்டும் ஹமாசின் நோக்கமாக இருக்கவில்லை. முஸ்லீம் சகோதரத்துவத்தைப் போலவே அவர்கள் ஒரு சமூக இயக்கமாகவே செயற்பட்டார்கள். பாடசாலைகளையும் மருத்துவ மனைகளையும் அவர்கள் தாபித்தார்கள். சமூக நலன் பேணும் நிறுவனங்களை நடத்தினார்கள். குடும்பப் பிரச்சினைகளில் தலையிடும் நடுவர்களாகச் செயற்பட்டார்கள். இவ்வாறான செயற்பாடுகளின் காரணமாக காஸா சமூகத்தின் பிரிக்க முடியாத ஒரு பகுதியாக அவர்கள் மாறினார்கள்.



“சமூக ரீதியாகப் பார்க்கும் போது, ஹமாசுக்கு இன்று அவ்வாறான சக்தி இருப்பதாகத் தெரியவில்லை. முன்னர் சமூகத்துக்கு வழங்கிய சேவைகளை அவர்களால் இப்போது வழங்கும் நிலையில் அவர்கள் இல்லை. இஸ்ரேலிய படைகளின் மிகக் கடுமையான எறிகணை வீச்சின் காரணமாக சுதந்திரமாக இப்போது அவர்களால் நடமாட முடிவதில்லை” என்று அப்டெல் றஹமான் விளக்கம் தந்தார்.

“இராணுவ ரீதியாகவும் அவர்களது ஆற்றல் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறது. அவர்களது ஆயுதக் கையிருப்பு கணிசமான அளவு குறைந்திருக்கிறது. சுரங்கப் பாதைகள் பலவும் அழிக்கப்பட்டிருக்கின்றன. அவர்களது உட்கட்டமைப்பு சிதைக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## சிங்களவர்களிடம் ... தொடர்ச்சி ...

அவர்களை நம்பி ஏமாந்தவராக நாங்கள் சம்பந்தன் ஐயாவினை பார்கின்றோம். தற்போது ஒன்பதாவது ஜனாதிபதி தேர்தல் நடைபெறப்போகின்றது. அந்த தேர்தலில் வெற்றிபெறும் ஜனாதிபதியுடன் பேசி ஏமாறுவதற்கு முன்பாகவே அவர் மரணித்து விட்டார். அவர் இருந்திருந்தால் ஒன்பதாதுவ ஜனாதிபதியும் அவரை ஏமாற்றியிருப்பார்."

இது உண்மையாக இருக்கலாம் ஆனால் இலங்கையில் உள்ள எந்த தலைவரும் தமிழர்களுக்கான தீர்வினை வழங்கமாட்டார்கள் என்பதை அவர் என்றும் கருத்தில்கொள்ளாதது கவலையான விடயம் என்றாலும் அவர் இந்த நாட்டிற்குள் தமிழர்களுக்கு தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையினை சாகும் வரையில் கொண்டிருந்தார்.

அவருக்கு எமது இறுதி அஞ்சலியை செலுத்தவேண்டிய பொறுப்பு தமிழ் மக்களுக்கு இருந்தாலும் அதனை செய்ய தவறிவிட்டதாகவே நோக்கவேண்டியுள்ளது.

குறிப்பாக இன்று கிழக்கு மாகாணத் தினைப்பொறுத்த வரையில் உரிமை அரசியலுக்கு பதிலாக சலுகை அரசியல் இளந்தலைமுறையினர் மத்தியில் ஊட்டப்படுகின்றது.தமிழ் தேசிய அரசியலுக்குள் காணப்படும் பிளவுகளும் போட்டி அரசியலும் தமிழ் இளையோர் மத்தியில் தமிழ் தேசிய அரசியல் தொடர்பில் நம்பிக்கை யிழக்கப்படும் நிலையில் சலுகை அரசியல் அதனை மிக சாதகமாக பயன்படுத்திக்கொள்கின்றது.

இன்று கிழக்கில் பிள்ளையானுக்கு வீதிகள் அமைப்பதற்கு சுமார் 13பில்லியன் ரூபாவினை அரசாங்கம் வழங்கியுள்ளது.இதன்மூலம் பல நூறு கோடி ரூபாவினை உழகை;கும் பிள்ளை யான் அவற்றின் மூலம் இளைஞர்களை கவரும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் அதே நேரம் வியாழேந்திரனும் உழகை;கும் பணத்தின் ஒரு பகுதியை இவ்வாறு சலுகையினை காட்டி தமது செயற்பாடுகளை முன்னெடுக்கும் நிலைமை காணப்படுகின்றது.

இவ்வாறான நிலைமைகள் காரணமாக கிழக்கில் தமிழ் தேசிய உணர்வு அரசியல் என்பது மழுங்கடிக்கப்பட்டுவரும் நிலைமையிலேயே சம்பந்தர் ஐயாவின் மரணமும் நிகழ்ந்துள்ள நிலையில் அவரின் மறைவினை தமிழ் சமூகம் அலட்டிக்கொள்ளாத நிலைமையே காணப் படுகின்றது.இதனை நாங்கள் சம்பந்தர் ஐயா மீதான வெறுப்பு நிலைமையில் வழமைபோன்று கடந்துசெல்லும் நிலைமையே காணப்படுகின்றது. இதற்கான காரணத்தினை கண்டறிந்து அவற்றினை நிவர்த்திசெய்து எதிர்காலத்தில் தமிழ் தேசிய அரசியலை நிலைநாட்டுவதற்கான எந்த செயற்பாடுகளும் இல்லை.குறைந்தபட்சம் சிங்கள பேரினவாத அரசுகள் தங்களது கைப்பிள்ளைகளாக பிள்ளையானையும் வியாழேந்திரனையும் வைத்துக்கொண்டு கிழக்கில்முன்னெடுக்கும் தமிழ் தேசியத்திற்கு எதிரான செயற்பாடுகளை மக்கள் மத்தியில் தெளிவுபடுத்துவதற்கு கூட அரசியல்வாதிகள் முன்வராத நிலைமையே காணப்படுகின்றது.

இங்கு காணப்படும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் தமிழ் பொதுவேட்பாளர்கள் என்ற தமது திட்டத்திற்கான செயற்பாடுகளை மட்டுமே முன்னெடுக்கும் நிலைமையே காணப்படுகின்றது.இது கிழக்கின் தமிழ் தேசிய இருப்பிற்கும் தமிழர்களின் இருப்பிற்குமான ஆபத்தான விடயங்கள் என்பதை எதிர்காலத்தில் தமிழர்கள் உணரும் நிலைமை ஏற்படும். அதன்போது சம்பந்தன் ஐயா போன்றவர்கள் நினைவுகூரப்படுவார்கள்.

• • •

## பிரித்தானியாவில் ... தொடர்ச்சி ...

பிரதமர் இல்லத்தில் இருந்து நாட்டு மக்களுக்கு உரையாற்றியிருந்தார்.

இது மாற்றத்துக்கான ஆரம்பம் எனவும், அரசாங்கம் மீண்டும் பொதுமக்களுக்கு சேவை செய்வதற்கான ஆணையை பெற்றுள்ளது எனவும் அவர் தனது உரையில் தெரிவித்துள்ளார்.

அதேசமயம், நடந்து முடிந்த தேர்தல் ஆட்சியில் இருந்த கட்சிக்கு மக்கள் வழங்கிய தண்டனையாகஅமைந்துள்ளது எனபிரித்தானிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. முன்னாள் பிரதமர் லிஸ் ரஸ், பெனி மோடன்ற் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் உட்பட பல அமைச்சர்கள் தோல் வியை சந்தித்துள்ளனர். அதேசமயம் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியா பிரிந்து செல்வதற்கான உந்துசக்தியாக இருந்த நைஜல் பெராஜ் கடந்த ஏழு தடவைகள் தேர்தலில் தோல்வியடைந்தபோதும் தற்போது எட்டாவது தடவையாக வெற்றிபெற்றுள்ளார்.

அவர் உருவாக்கிய கட்சியே பழமை வாதக் கட்சியின் தோல்விக்கு பிரதான காரணம் என கருதப்படுகின்றது. தொழிற்கட்சி 9.7 மில்லியன் வாக்குகளையும், பழமைவாதக் கட்சி 6.8 மில்லியன் வாக்குகளையும், நைஜல் பெராஜின் கட்சி 4.1 மில்லியன் வாக்குகளையும் பெற்றுள்ளன.

இந்த வாக்கு விகிதத்தை பழமைவாதக் கட்சியின் வாக்குகளுடன் சேர்த்தால் அதன் விகிதம் ஏறத்தாள 11 விகிதமாக இருக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே தொழிலிகட்சியின் தலை வராக இருந்து 2017 ஆம் ஆண்டு 40 விகித வாக்குகளை பொதுத்தேர்தலில் பெற்ற ஜெரமி கோர்பைன் தனது தொகுதியில் சுயேட்சையாக நின்று அவரை கட்சியில் இருந்து வெளியேற்றிய தொழிற்கட்சியை தோற்கடித்துள்ளார்.

இஸ்ரேலுக்கு எதிரான கருத்தை கூறியதாக தெரிவித்து அவர் பதவியில் இருந்து வெளியேற்றப்பட்டதுடன், இந்த பொதுத்தேர்த லில் போட்டியிடாது அவரை கட்சியில் இருந் தும் வெளியேற்றியிரந்தனர். ஆனால் அந்த தொகுதி மக்கள் அவரை 11ஆவது தடவையாக நாடாளுமன்றத்திற்கு தெரிவுசெய்துள்ளனர்.

மேலும் பல தொகுதிகளில் இஸ்ரேல் பாலஸ்தீனப் போர் முஸ்லீம் மக்களின் வாக்குக ளில் எதிரொலித்துள்ளது. பல முஸ்லீம் பிரதிநிதிகள் சுயேயட்சையாக வெற்றிபெற்றுள் ளனர். 3 தொகுதிகளில் தொழிற்கட்சி கடும் சவால்களையும் முஸ்லீம் வேட்பாளர்களுக்கு எதிராக சந்தித்திருந்தது. சில தொகுதிகளில் சில நூறு வாக்கு வித்தியாசத்தில் பிரித்தானியா வின் பிரதான கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெற்றிருந்தனர்.

இந்த தேர்தலில் தொழிற்கட்சி சார்பில் போட்டியிட்ட ஈழத்தமிழரான உமாக குமரன் முதல் முறையாக ஈழத்தமிழர் பிரதிநிதியாக வெற்றிபெற்றுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. பிரித்தானியாவின் கடன் தொலை ஏறத்தாள 2.6 றில்லியன் பவுண்ஸ்களை எட்டியுள்ளது. அது மொத்த உற்பத்தியின் 100 விகிதமாகும். கடந்த ஆண்டு 117 பில்லியன் பவுண்ஸ்களை பிரித்தானியா வட்டியாக கட்டியுள்ளது. 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இது இரு மடங்காகும். எனவே எதிர்வரும் அரசுக்கு மிகுந்த சவால்கள் நிறைந்த காலமாகவே ஆட்சிக்காலம் இருக்கப்போகின்றது. உக்ரைன் போர் மற்றும் கோவிட்-19 பெரும்தொற்று ஏற்படுடுத்திய பொருளாதார நெருக்கடிக்கான தீர்வை மக்கள் தேடுவதே இந்த தேர்தலில் எதிரொலித்துள்ளது. அதனை தொழில்றட்கி நிறைவேற்றவதில் தான் அதன் எதிர்காலம் தங்கியுள்ளது.

• • •

## அரசியலமைப் ... தொடர்ச்சி ...

"கடந்த காலங்களில் ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் பிரதிநிதித் துவப்படுத்தும் அடிமைகளும், கையாட்களும், சகாக்களும் நாட்டுக்கு எதிர்மறையான செய்தி களை முன்வைத்து ஜனாதிபதி தேர்தலை நடத்து வது பொருத்தமற்றது என்ற கருத்தை உருவாக் கினார்கள்" என்று தெரிவித்தார்.

"பல சந்தர்ப்பங்களில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு இது சரியான தருணம் அல்ல என மக்களை நம்பவைக்கும் வகையில் அரசியல் செயற்திட்டமொன்றை முன்னெடுக்க ஜனாதிபதியும் அவருக்கு நெருக்கமான குழுக்க ளும் முயற்சித்தனர். இவ்வாறான நிலையில் சட்ட ரீதியாகவும் அரசியலமைப்பு ரீதியாகவும் நடத் தப்பட வேண்டிய ஜனாதிபதி தேர்தலை பிற்போட மேலும் பல முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் அரசியலமைப்பை மீறும் சதிகளாகும்" என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர், "செப்டம்பர் 17 முதல் ஒக்டோபர் 16 வரையிலான காலப் பகுதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும் என்று அரசியல மைப்பு தெளிவாக கூறினாலும், அரசியலமைப்பு ரீதியாக புதிய ஜனாதிபதியை தெரிவு செய்யும் நாட்டு மக்களுக்கு இருக்கும் உரிமையை இல்லாதொழித்து, சீர்குலைக்க சில குழுக்கள் செயற்பட்டு வருகின்றன. இந்நாட்டில் சர்வஜன வாக்குரிமையும் மக்களின் வாக்குரிமையும் பாதுகாக்கப்பட வேண்டும்" என்று மேலும் தெரிவித்தார்.

## சிறுவர்களை ... தொடர்ச்சி ...

குழந்தைகளை வலுப்படுத்துவதற்கான தேவை கள், தரவு அடிப்படை மேம் பாடு, முன்னோக்கி செல்லும் வழி பற்றிய திறந்த விவாதம் போன்ற பல விடயங்கள் இதன்போது கலந்துரை யாடப்பட்டது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தைத் திணைக்களத்தின் ஆணையாளர் திருமதி. ஆர். ரிஸ்வாணி, துறை சார்ந்த அதிகாரி கள், துறைசார் சார்ந்த உத்தியோகத்தர்கள், CERI நிறுவனத்தின் அதிகாரிகள் உட்பட உத்தியோ கத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## உயர் வருமானம் ... தொடர்ச்சி ...

2022 ஆம் ஆண்டு உக்ரைன் போர் ஆரம்பமாகிய பின்னர் மேற்குலக நாடுகள் பெருமளவான பொருளாதாரத் தடைகளை ரஸ்யா மீது தொடர்ந்து விதித்து வருகின்றபோதும் ரஸ்யா வின் பொருளாதாரம் தொடர்ந்து வளர்ச்சி கண்டுவருவது என்பது எதிர்வரும் காலங்களில் மேற்குலக நாடுகளின் தடைகள் வலுவற்றதாக மாற்றமடையலாம் என்ற கருத்துக்களை உருவாக்கியுள்ளது.

## உக்ரைனுக்கு ... தொடர்ச்சி ...

சாலைக்கு கடுமையான சேதம் ஏற்பட்டுள்ளதாக அந்த பகுதி நீதிபதி தெரிவித்துள்ளார். 82,000 சதுர மீற்றர் பரப்பளவுள்ள இந்த தொழிற்சாலையில் பெருமளவானஏவுகணைகளும், எறிகணைகளும் தயாரிக்கப்படுவதுண்டு.

நடைபெறும் உக்ரைன்-ரஸ்ய போரில் உக்ரைன் படையினருக்கு 3 மில்லியன் 155 மி.மீ பீரங்கி எறிகணைகளையும், 10,000 ஜவலின் ஏவுகணைகளையும், எண்ணுக்கணக்கற்ற 120 மி.மீ மோட்டார் எறிகணைகளையும் அமெரிக்கா வழங்கியிருந்தது.

இந்த வருட இறுதிக்குள் ஒரு மாதத்திற்கு உற்பத்தி செய்யப்படும் எறிகணைகளின் அளவை 28,000 இல் இருந்து 70,000 ஆக அதிகரிக்கப் போவதாக அமெரிக்காவின் பாது காப்பு தலமைய கம் தெரிவித்துள்ளது.

## கை கழுவப்படும் ... தொடர்ச்சி ...

தீர்வுக்கே வழிவகுப்பவை. அவை நிரந்தரத் தீர்வாக அமையப்போவதில்லை. ஆகவே பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான நாட்சம்பள முறைமை மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு என்றும் அவர்களுக்கு நியாயமான வருமானம் கிடைக்கக்கூடிய வகையில் புதிய பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும் என்றும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஏற்கனவே வலியுறுத்தி இருந்தமையும் இங்கு நோக்கத்தக்கதாகும்.

பெருந்தோட்ட தொழிலாளர்களை சிற்றுடைமையாளர்களாக மாற்றம்பெறச் செய்தல் வேண்டும் என்ற கோரிக்கைகளுக்கு மத்தியில் சிற்றுடைமை தொடர்பில் நோக்குகையில், தேயிலைத் தொழில் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலேயே சிற்றுடைமைகளும் உருவாக்கப்பட்டன. ஆரம்பத்தில் இவை தனியார் தோட்டங்களாக அடையாளப்படுத்தப் பட்டாலும், காணிச் சீர்திருத்தத்தின் பின்னர் இத்தனியார் தோட்டங்கள் யாவும் சிற்றுடைமைகள் என்ற வரையறைக்குள் கொண்டு வரப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

அரசாங்கம் சிறுநில உரிமையாளர்களுக்கு பக்கபலமாக இருந்து சிறுதேயிலைத் தோட்டங்களை ஊக்குவிக்க உறுதியான வேலைத் திட்டங்களை முன்வைத்த நிலையில் பெருந்தோட்டங்களை மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே வழிநடத்தியது. இந்நிலையில் பெருந்தோட்ட மக்களில் பெரும்பாலானோர் தமிழர்கள் என்பதனால்தான் இந்தப் பாகுபாடா? என்றும் சிலர் தமது ஆதங்கத்தினை வெளிப்படுத்தி இருந்தமையும் நோக்கத் தக்கதாகும்.

1983 இல் இலங்கையில் 75,769 ஹெக்டேயரில் சிற்றுடைமைகளின் தேயிலை உற்பத்தி இடம்பெற்றது. இதேவேளை பின்வந்த காலங்களில் சிற்றுடைமைகளின் நிலப்பரப்பு படிப்படியாக அதிகரித்த போக்கினைக் கொண்டிருந்தது. இதனடிப்படையில் 1994 இல் 76,569 ஹெக்டேயரிலும், 2005 இல் 118,274 ஹெக்டேயரிலும், 2014 இல் 132,335 ஹெக்டேயரிலும் சிற்றுடைமைகளின் தேயிலை உற்பத்தி இடம்பெற்றது. 2014 இல் இரத்தினபுரி மாவட்டமே அதிக பரப்பளவினைக் (30,447 ஹெக்டேயர்) கொண்ட மாவட்டமாக வளர்ச்சியடைந்திருந்தது.

தேயிலை உற்பத்தியைப் பொறுத்த வரையிலும் சிறுதோட்டங்கள் படிப்படியாக பெருந்தோட்டங்களை முந்திச் சென்றுள்ளன. இதற்கேற்ப 1995 இல் பெருந்தோட்ட தேயிலை உற்பத்தியானது 168.8 மில்லியன் கிலோகிராமாகும். இதே ஆண்டில் சிறுதோட்ட தேயிலை உற்பத்தி 111.3 மில்லியன் கிலோ கிராம்களாகும். இந்நிலையில் 2000 இல் 100.1, 2005 இல் 111.5, 2010 இல் 100.8, 2017 இல் 104 மில்லியன் கிலோ கிராம்களாக பெருந்தோட்ட தேயிலை உற்பத்தி அமைந்திருந்தது. இதேவேளை 2000 இல் 183.8, 2005 இல் 205.7, 2010 இல் 230.1, 2017 இல் 244.0 மில்லியன் கிலோ கிராம்கள் என்றவாறு சிறுதோட்ட தேயிலை உற்பத்தி அமைந்திருந்தது.

கடன் வசதிகள், உரமானியங்கள், சிறப்பான சந்தை வாய்ப்பு போன்ற பல விடயங்களையும் உள்ளடக்கிய அரசின் முன்னெடுப்புக்கள் சிறுதோட்ட உடைமையாளர்களின் எழுச்சிக்கு வலுசேர்த்தன என்றால் மிகையாகாது. பெருந்தோட்டங்களில் அபிவிருத்தி என்னும் போர்வையில் சுவீகரிக்கப்பட்ட தேயிலைக் காணிகள் பெரும்பான்மை மக்களுக்கே பகிர்ந்தளிக்கப்பட்டன. இதற்கு பல உதாரணங்களையும் எம்மால் கூறமுடியும் என்பதோடு இது ஒரு கசப்பான வரலாறுமாகும்.

### ஜனாதிபதி செயலணி

பெருந்தோட்ட மக்களை சிற்றுடைமையாளர்களாக மாற்றுவதன் மூலம் அவர்களின் நிலவுடைமைக் கனவும் சாத்தியமாகும் வாய்ப்புள்ளதாக புத்திஜீவிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்நிலையில் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவும் இதற்கு அதிகமாகவே அழுத்தம் கொடுத்து வருகின்றார். கூட்டணி கட்சிகளுடனான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது சஜித் பிரேமதாசா இதனை ஆழமாகவே வலியுறுத்தி இருந்தார். நாட்டின் பொருளாதாரத்துக்கு இலட்சக்கணக்கான பெருந்தோட்ட மக்கள் பாரியளவில் ஒத்துழைப்பை வழங்குகின்றனர். அவர்களை தொடர்ந்தும் தொழிலாளர்களாகவே வைத்திருப்பது எமது எதிர்பார்ப்பல்ல.

காலந்தோறும் தொழிலாளர்களாகவே வாழ்ந்து வரும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு காணியுரிமை, பயிர்ச்செய்கை நிலவுரிமை, தமது வீட்டுறுதி சிறுதோட்ட உரிமை என்பவற்றை வழங்குவதற்கும் நாம் நடவடிக்கை எடுப்போம் என்று சஜித் தெரிவித்திருந்தார். அத்தோடு ஐக்கிய மக்கள் கூட்டணி அரசாங்கத்தில் ஸ்தாபிக்கப்படும் விசேட ஜனாதிபதி செயலணியின் ஊடாக பெருந்தோட்ட மக்களின் பொருளாதார, சமூக அபிவிருத்தி மற்றும் அரசியல் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு வழங்கப்படும் என்றும் சஜித் தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி இருந்தார்.

இதேவேளை பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை முறையினை மாற்றியமைப்பதற்கு சில வழிமுறைகளை புத்திஜீவிகள் முன்வைத்துள்ளனர். ஒப்பந்த அடிப்படையிலான உற்பத்தி முறையைக்(ContractFarming) கையாளுதல் மற்றும் பெருந்தோட்டங்களை சிற்றுடைமைகளாகப் பிரித்தல், பங்கேற்பு முகாமை முறை (Participatory Management) ஒன்றினைக் கையாளுதல் என்பன அவையாகும். இவ்விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்படுவது மிகவும் அவசியமாகும்.

• • •

## போலியான ... தொடர்ச்சி ...

எனவே இந்த நிலையில் எதுவும் நிகழலாம். ஏன் எதிர்த்தரப்பில் போட்டியிடும் டொனால்ட் டிறம் படுகொலை கூட செய்யப்படலாம்.

திடீரென பொதுத்தேர்தலை அறிவித்த பிரான்ஸின் அதிபர் மக்ரோன் தானாகவே தன்னை தோற்கடித்த நிலையை எதிர்பார்த்து நிற்கின்றார். அதாவது பிரான்ஸில் ஆளும்வர்க்கத்திற்கு எதிர்வரும் 3 வருடங்கள் மிகவும் கடுமையானதாக இருக்கலாம்.

ஏனைய மேற்குலக நாடுகளிலும் இதே நிலைதான். அண்மையில் இத்தாலியில் இடம்பெற்ற ஜி-7 மாநாடு இதனை உணர்த்தியுள்ளது. சுதந்திர உலகத்தின் ஏழு தலைவர்களில் இத்தாலியின் பிரதமர் ஜியோர்ஜியா மெலொனி மட்டுமே வலதுசாரி கட்சியாக உறுதியான அரசியல் பலத்தைக் கொண்டவர்.

எதிர்காலத்தில் என்ன நிகழப்போகின்றது? தாராளவாதக் குடியரசுகள் இந்த நெருக்கடிகளில் தப்பிப்பிழைப்பது கடினம். மத்தியில் உறுதியான அரசு அமைவதற்கும், பலமான தலைவர்கள் உருவாகுவதற்கும் புதிய சித்தாந்தங்கள் உருவாகுவது அவசியம். அது அடிமட்டத்தில் இருந்து அல்லது நாட்டை பாதுகாக்கும் உயர் மட்டங்களில் இருந்து உருவாகலாம். அதாவது புரட்சி அல்லது புதிய உருவாக்கம் ஒன்று நாடுகளில் ஏற்படும்.

தற்போதைய நிலையில் தேர்தல் முறை செயலிழந்து வருகின்றது. தற்போதைய அரச தலைவர்களுக்கு யாரும் சக்கரவர்த்தியாக முடிசூடப்போவதில்லை. அதாவது தேர்தல்கள் நடைமுறையில் இருக்கும் ஆனால் இறுதி முடிவை உயர்மட்டம் தமக்குள் தீர்மானித்துக் கொள்ளும். அவர்கள் மக்களிடம் தமக்கான ஆணையை பெற முயற்சிப்பார்கள்.

மேற்குலகத்தின் இயக்கம் இழக்கப்பட்டு விட்டது. அதாவது ஜனநாயமும் இல்லாது போய்விட்டது. அதனை ஈடுசெய்யப்போகும் நடைமுறைக்கு தகுந்த ஆலோசனைகள் தேவை. அது தேர்தலின் ஊடகவேனும் இருக்கலாம். அதன் செயற்திறனை இயற்கை தான் தீர்மானிக்கும்.

**நன்றி: ரஸ்யா ருடெ**

## ரஸ்யா- இந்தியா ... தொடர்ச்சி ...

செய்வதற்குபதிலாக புனரமைப்பு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனினும் 49 விகிதமான அதன் பங்குகளை விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளோம். ஆனால் இதுவரையில் யாரும் கொள்வனவு செய்ய முன்வரவில்லை. ஆறு விண்ணிப்பங்கள் கிடைக்கப் பெற்ற போதிலும் யாரும் உகந்தவர்களாகத் தெரியவில்லை.

விமான நிறுவனத்தின் அபிவிருத்தி தொடர்பில் சீன நிறு வனங்கள் அக்கறைகளை காண்பித்தபோதும் தற்போது அது யப்பான் நிறுவனத்திற்கு வழங்கப் பட்டுள்ளது. இலங்கையின் கடன் மறுசீரமைப்பில் யப்பான் விரைவாக செயற்பட்டிரந்தது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



## நோர்டிக்... தொடர்ச்சி ...

*(https://www.fraserinstitute.org/sites/default/files/human-freedom-index-2021.pdf)*

அதேபோன்று, மனித உரிமைக் கோட்பாடுகளை வலுவாகவும் தொடர்ச்சியாகவும் கடைப்பிடிக்கும் நாடுகளின் பட்டியலை, முறையே சுவீடன் முதலாம் இடம், டென்மார்க் நான்காம் இடம், நோர்வே ஐந்தாம் இடம் ஃபின்லாந்து ஏழாம் இடம் என்று காணலாம்.

*(https://www.usnews.com/news/best-countries/rankings/cares-about-human-rights)*

உலகின் தலைச்சிறந்த பெண்ணிய மேம்பாடுகள், ஆண்-பெண் சமத்துவம் ஆகியவற்றைப் பேணும் நாடுகளை பட்டியலிட்டாலும் ஃபின்லாந்து, டென்மார்க், நோர்வே, சுவீடன் ஆகிய நாடுகள் முன்னணியில் இருக்கும்! உலகின் அதிக நாத்திகர்கள் வாழும் நாடுகளின் பட்டியலில் இந்த நாடுகள் இருக்கும்! உலகின் பாதுகாப்பான நாடுகளின் வரிசையில் இந்த நாடுகள் கட்டாயம் இடம்பெற்றிருக்கும்! உலகின் சமூக நலத்திட்டங்களுக்கான மேற்கோள்களை இந்நாடுகள் பின்பற்றும் செயற்பாடுகளின் வழியாகவே ஒப்பிடமுடியும்!

இவ்வருடம் மட்டுமல்ல, கொரொனா பேரிடர் காலத்திலும் அதற்கு முன்பும் என இத்தகைய பெருமைமிகு இடங்களைத் தொடர்ந்து இந்த நாடுகள் தக்க வைத்து வருகின்றன.

ஃபின்லாந்து உள்ளடங்கிய மேற்குறிப்பிட்ட நாடுகள் இப்படியாக உலகின் பல முன்னணிப் பட்டியல்களில் இடம் பெற்று உள்ளதற்கும் இந்நாடுகளின் கல்வித்துறையின் செயற்பாடுகளுக்கும் மிக நெருங்கியத் தொடர்புகள் உண்டென திடமாக நம்பலாம்.

### ஸ்காண்டினேவியன் — நோர்டிக் நாடுகள்:

இனி அடுத்தடுத்து, ஸ்காண்டினேவியன் நாடுகள், நோர்டிக் நாடுகள் என பொதுச்சொற்களால் இந்நாடுகளை குறிப்பிட வேண்டும் என்பதால், இப்பெயர்கள் தொடர்பான விளக்கத்தினை அளிப்பது இங்கு பொருத்தமாக இருக்கும் என நம்புகிறேன்.

சுவீடன், நோர்வே, டென்மார்க் மூன்றும் இணைந்திருக்கும் பகுதிகளைஸ்காண்டினேவியன் நிலம் என வகைப்படுத்துகின்றனர். இந்தோ-ஐரோப்பியக் கூட்டில் இருந்து வந்த ஜெர்மானிய மொழிப்பிரிவின் கிளை மொழி, மிகக் குறிப்பாக வடக்கு ஜெர்மானியத்தின் பண்டைய மொழியில் இருந்து உருவாகி வந்தவை ஸ்காண்டினேவியன் மொழிகள் (சுவீடிஷ், டேனிஷ், நோர்வேஜியன்). இந்நாடுகளையே ஸ்காண்டினேவியன் நாடுகள் என்றும் அழைப்பர்.

நோர்வே நிலப்பரப்பு, டென்மார்க் நாட்டின் கட்டுப்பாட்டில் 400 வருடங்களுக்கு மேலாகவும், சுவீடனின் கட்டுப்பாட்டில் 100 ஆண்டுகளுக்கும் இருந்தது. ஃபின்லாந்து சுவீடனின் கட்டுப்பாட்டில் 600 ஆண்டுகளுக்கும் மேலாகவும் ருசியா நாட்டின் கட்டுப்பாட்டில் 100 ஆண்டுகள் இருந்தது. நோர்வேஜியர்களும், ஸ்காண்டினேவிய நிலப்பரப்பின் பூர்வக்குடிகளும் கி.பி 9ஆம் நூற்றாண்டில் ஐசுலாந்து தீவில் குடியேறியப்பின் அதேகாலக்கட்டத்தில் குடியரசு அரசியலமைப்பினை உருவாக்கிக்கொண்ட அமைத்த நாடாளுமன்றமே உலகின் பழைய நாடாளுமன்றம்!

*(https://www.theguardian.com/notesandqueries/query/0,,-80426,00.html)*

1950களுக்குப் பின்னர், ஸ்காண்டினேவியன் கூட்டில், ஐசுலாந்தும் ஃபின்லாந்தும் இணைந்தப் பின், நோர்வே, சுவீடன், டென்மார்க், ஃபின்லாந்து மற்றும் ஐசுலாந்து ஆகிய ஐந்து நாடுகளின் கூட்டமைப்பை நோர்டிக் நாடுகள் என்றழைக்கின்றனர். ஐரோப்பிய பெருநிலப்பரப்பின் ஒன்றிணைப்பில் இருந்து வரைபடங்களில் தனித்து விடப்பட்டு, காட்சியளிக்கும் இந்நாடுகள் ஏனைய ஐரோப்பிய நாடுகளைப் போல கண்டம் விட்டு கண்டம் தாவி ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டவில்லை. மாறாக, தங்களுக்குள்ளேயே, ஆட்சி, அரசியல் அதிகாரக் கொடியினை பல நூற்றாண்டுகளுக்கு ஏவியிருந்தனர்.

உலகில் இந்த 5 நாடுகளைப் பற்றிப் பொதுவான சொல்லால் சுட்டும்பொழுதும் நோர்டிக் நாடுகள் என்பர். நோர்டிக் கல்வி, நோர்டிக் சமூகம், நோர்டிக் பாலினச் சமத்துவம், நோர்டிக் பெண்ணியம், நோர்டிக் மனித உரிமைச் சட்டங்கள், நோர்டிக் மருத்துவம், நோர்டிக் சமூகநலத்திட்டங்கள் என பல உதாரணங்களுக்கும் வழிகாட்டுதல்களுக்கும் இந்த நாடுகளை மேற்கோள் காட்டுவர்.

நோர்டிக் நாடுகளில் ஸ்காண்டினேவியன் நாடுகளான சுவீடன், டென்மார்க், நோர்வே மூன்றும் அரசியலமைப்பு முடியாட்சி *(Constitutional Monarchy)* கொண்டவை, ஃபின்லாந்தும் ஐசுலாந்தும் குடியரசு (Republic) அரசியலமைப்புக் கொண்டவை! அரசியல் அதிகார அமைப்புகள், அதிகாரப்பரவலாக்கம் குறித்தான தகவல்களை நூலின் ஏனைய பகுதிகளில் விளக்கப்பட்டுள்ளது. சுருக்கமாக, இந்நாடுகளில் நடுவண் அரசு, அதன் கீழான நகராட்சிகள் என்று மட்டுமே பிரிவடைந்திருக்கும், இந்திய ஒன்றியம், ஜெர்மனி, கனடா, சுவிசர்லாந்து போல, ஒன்றிய அரசு-மாநில அரசு என கூட்டாட்சித் தத்துவங்களில் இயங்கும் நாடுகள் அல்ல!

### அரசியலும் பாலினச்சமத்துவமும்:

1906இல் ஐரோப்பியாவில் முதன் முதலாக அனைத்துப் பகுதிகளிலும் ஆண்-பெண் இரு பாலருக்குமான ஓட்டுரிமை மற்றும் தேர்தலில் நிற்கும் சம உரிமையினை ஃபின்லாந்து உருவாக்கியது. அடுத்த ஆண்டு நடைபெற்றத் தேர்தலில் 19 நாடாளுமன்ற உறுப்பினர்களை பெற்று உலகின் முதலிடத்தை இதிலும் பெற்றுக் கொண்டது. 1926லேயே முதல் பெண் அமைச்சராக மீனா சீலன்ஃபா (Miina Sillanpää) உருவானார்.

(தமிழ்நாட்டில் (அன்றைய சென்னை மாகாணத்தில்), பெண்களுக்கான ஓட்டுரிமைக்கான தீர்மானத்தை நீதிக்கட்சி ஆட்சி 1921இலேயே நிறைவேற்றியதையும் இங்கே ஒப்பிட்டுக் கொள்வோம்!)

**தொடரும்**

## சம்பந்தனின் ... தொடர்ச்சி ...

இதனிடையே, வெற்றிடமாகியுள்ள திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற ஆசனத்திற்காக இலங்கை தமிழரசுக் கட்சியின் சண்முகம் குகதாசனின் பெயரை வர்த்தமானியில் அறிவிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்திருந்தது. அந்த வர்த்தமானி நேற்று வெளியானது.

திருகோணமலை திரியாய் பகுதியை பிறப்பிடமாகக் கொண்ட சண்முகம் குகதாசன் அரச அறிவியல் துறையில் முதுநிலை பட்டதாரியாவார். நீண்ட காலமாக கனடாவில் வசித்து வந்த சண்முகம் குகதாசன், 2020 ஆம் ஆண்டு முதல் இலங்கை தமிழரசுக் கட்சியின் மாவட்ட கிளைத்தலைவராக இரண்டு சந்தர்ப்பங்களில் கடமையாற்றியுள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் 2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளு மன்ற தேர்தலில் சண்முகம் குகதாசன் போட்டியிட்டிருந்தார். அந்த தேர்தலில் இலங்கை தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவர் காலஞ்சென்ற இராஜவரோதயம் சம்பந்தனுக்கு பின்னர் அதிகூடிய வாக்குகளை அவர் பெற்றிருந்தார். பொதுத் தேர்தலில் அவர் 16 ஆயிரத்து 770 வாக்குகளைப் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கியூபாவில்... தொடர்ச்சி ...

அமெரிக்காவின் சிந்தனைப் பள்ளி தெரிவித்துள்ளது.

ஆனால் இது எமக்கும் கியூபாவுக்கும் இடையிலான உறவு கள். அதில் நாம் மூன்றாம் தரப்பை குறிவைக்கவில்லை என சீனாவின் வெளிவிவகாரப் பேச்சாளர் மாவோ நிங் தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் இந்த குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது. சீனாவைச் சீண்டுவதை அமெரிக்கா நிறுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே அமெரிக்காவின் ஊடகங்கள் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருவதாகவும், அவர்களின் குற்றச்சாட்டுக்களுக்கு எந்த ஆதரமும் இல்லை எனவும் கியூபாவின் துணைவெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார். கியூபாவில் உள்ள அமெரிக்கத் தூதரகத்திடம் கூட அதற்கான ஆதாரங்கள் இல்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் கப்பல்களும், விமானங்களும் சீனாவை அண்மித்த பகுதிகளில் நிலைகொண்டு சீனாவை கண்காணித்து வருகின்றன. ஆனால் கியூபாவில் சீனா தளம் அமைப்பது அவர்களுக்கு பிரச்சனை என்று கூறுகின்றனர். உண்மையில் அது அவர்களுக்கு பிரச்சனை என்றால் அவர்கள் சீனாவை கண்காணிப்பதை முதலில் நிறுத்த வேண்டும் என சீனாவைத் தளமாகக் கொண்ட International Research Institute of Global Cyberspace Governance என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

## பிரித்தானியா... தொடர்ச்சி ...

வாக்குகளை மட்டுமே பெற்று 4வது இடத்தை பெற்றார்.

இவரது குடும்பம் இலங்கையில் ஏற்பட்ட உள்நாட்டு போருக்கு பின்னர் இல்கிநாந்துக்கு குடி பெயர்த்துள்ளனர். லண்டனில் பிறந்து வளர்ந்த அவர், அங்கேயே படித்து அரசியலில் இளங்கலை பட்டம் பெற்றார்.

உமா 2009ம் ஆண்டு முதல் 2010 வரை தொழிலாளர் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் டான் பட்லரின் நாடாளுமன்ற ஆராய்ச்சியாளராகவும், வழக்கறிஞராக வும் பணியாற்றியிருந்தார்.

அவரின் வெற்றிக்கு இலக்கு ஊடகம் ஈழத் தமிழ் மக்கள் சார்பில் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன், ஈழத்தமிழ் மக்களின் உரிமைக்கான குரலாக அவர் பிரித்தானியா நாடாளுமன்றத்தில் ஒலிக்கவேண்டும் எனவும் வேண்டி நிற்கின்றது.

## இங்கிலாந்தின் ... தொடர்ச்சி ...

சார்பில் அவர் கலந்து கொள்ளவுள்ளார். அவர் பிரித்தா னியாவின் விளையாட்டுக் குழுவில் அங்கம் வகிக்கும் இளம் வயது வீரரான 23 வயது நிரம்பிய லான் யாயோவை விட 15 வயது இளைய வராவார்.

போதனாவின் விளையாட்டுத் திறமை தம்மை ஆச்சரியப்பட வைத்ததாகவும், பிரித்தானியாவின் சதுரங்க விளையாட்டு வீரர்களில் போதனா மிகவும் திறமையானவர் எனவும் இங்கிலாந்தின் சதுரங்கள விளையாட்டுத்துறை முகாமையாளர் மல்கொம் பெயின் தெரிவித்துள்ளார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் தான் ஒரு நாளைக்கு ஒரு மணிநேரம் சதுரங்க விளையாட்டை விளையாடி பயிற்சிகளை பெற்றதாகவும், பிரித்தானியாவில் இடம்பெற்ற 8 வயதுக்கு உட்பட்ட அனைத்து சதுரங்க போட்டிகளிலும் தான் வெற்றிபெற்றதாகவும் போதனா தெரிவித்துள்ளார்.

## ஹமாசைத் ... தொடர்ச்சி ...

நீண்ட காலமாகப் போரிட்டு வருவதன் காரணமாக சண்டையில் ஈடுபடும் அவாகளது படைவீரர்கள் கூடக் களைப்படைந்திருக்கலாம். ஆனால் இதற்கு முற்றிலும் மாறாக அரசியல் ரீதியாக நீங்கள் பார்த்தால் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இப்போது அவர்கள் பலமாகவே இருக்கிறார்கள்'' என்று அந்த ஆய்வாளர் சுட்டிக்காட்டினார்.

கொள்கைக்கும் ஆய்வுக்குமான பாலஸ்தீன மையத்தினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பில் மேற்குக் கரையிலும் காஸாப் பிரதேசத்திலும் வாழ்கின்ற பாலஸ்தீனர்களில் 67 வீதமானோர், கடந்த ஒக்ரோபர் மாதம் இஸ்ரேல் மீது ஹமாஸ் மேற்கொண்ட தாக்குதலை ஆதரிக்கிறார்கள். அதே வேளை, போர் நிறைவடைந்த பின்னர் ஹமாஸ் மட்டுமே காஸாவை நிர்வகிக்க வேண்டும் என்று 61 வீதமானோர் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

### அதிகாரத்தைத் தொடர்ந்து தக்க வைத்தல்

இவ்வாறான ஒரு திசையை நோக்கி ஹமாஸ் ஏற்கனவே நடவடிக்கைகளை எடுத்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. எகிப்து மற்றும் கட்டார் நாடுகளைச் சேர்ந்த நடுவர்கள் மூலமாக மிகத் தீவிரமான பேச்சுவார்த்தைகளை அவர்கள் முன்னெடுத்து வருகிறார்கள். போர் முடிவுக்கு வருகின்ற பொழுது தமது அதிகாரத்தை தாம் எந்த விதத்திலும் கைவிடப் போவதில்லை என்று அவர்கள் தெட்டத்தெளிவாகத் தெரித்திருக்கிறார்கள். ஹமாஸ் அனைத்து நடவடிக்கைகளில் இருந்தும் முற்றாக வெளியேறினால் மட்டுமே தற்போதைய போரைத் தாம் முடிவுக்குக் கொண்டு வருவோம் என்று இஸ்ரேல் வலியுறுத்தி வருகிறது. ''போர் ஒரு முடிவுக்கு வருகிற பொழுது, காஸாப் பிரதேசத்தை நிர்வகிக்கும் பொறுப்பில் ஹமாஸ் இருப்பதை அனுமதிப்பதைத் தவிர இஸ்ரேலுக்கு வேறு எந்த வழியும் இல்லை என்று இஸ்ரேலுக்கும் ஹமாசுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஹமாஸ் மீண்டும் அதிகாரத்தைக் கையில் எடுப்பதை இஸ்ரேல் விரும்பவில்லை. ஆனால், இஸ்ரேல் விரும்பினால் என்ன விரும்பாவிட்டால் என்ன, காஸாப் பிரதேசத்தின் எதிர்கால அரசாட்சியைப் பொறுத்தவரையில், பாலஸ்தீன அதிகாரத்துடன் இணைந்து ஹமாஸ் நிச்சயமாகப் பங்கு வகிக்கும் என்பதில் எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லை என்று அவர் தெரிவித்தார்.

இதற்கு மாறாக ஜெரூசலத்திலுள்ள அதிகாரிகளோ வேறு வகையான திட்டங்களை வகுத்து வைத்திருக்கிறார்கள். காலப் போக்கில், மிதவாத அரேபிய நாடுகளினால் ஆட்சி செய்யும் காலம் வரும்வரை, காஸாப்பிரதேசத்தைதமது இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் யோசனை பற்றியே இஸ்ரேல் தற்போது சிந்தித்து வருகிறது. நிலைமைகள் ஓர் உறுதியான நிலைக்கு வந்த பின்னர், சாவிகளை இஸ்ரேல் பாலஸ்தீனர்களிடம் ஒப்படைக்கும். ஆனால் அது ஹமாசாக இருக்காது. வேறு புதியவர்களாக இருப்பார்கள். அது ஹமாசாகவும் இருக்காது. பாலஸ்தீன அதிகாரமாகவும் இருக்காது. பயங்கரவாதத்துக்கு ஆதரவளித்து வருவதாக பாலஸ்தீன அதிகாரத்தை அது ஏற்கனவே குற்றஞ்சாட்டியிருக்கிறது.

### கடந்த காலத்தில் இழைக்கப்பட்ட தவறுகள்

இவை எவ்வாறிருப்பினும், இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் அமெரிக்கா செயற்பட்டதைப் போன்றே இஸ்ரேல் இப்போது செயற்படுவதாக ஆப்கானிஸ்தான் தேசிய பாதுகாப்பு ஆலோசகரின் உதவியாளராகப் பணியாற்றிய மிரியம் வாடக் கருத்துத் தெரிவித்தார்.

2001ம் ஆண்டு புரட்டாதிமாதம் 11ம் திகதி, அமெரிக்காவின் நியூயோர்க் நகரத்தில் அமைந்திருந்த இரட்டைக் கோபுரங்களின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து, அங்கு ஆட்சியில் ஈடுபட்டு வந்த ஒரு தீவிரவாத இஸலாமியக் குழுவான தலிபான்களின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக அமெரிக்கா ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்தது, அங்கு இராணுவ ரீதியான அழுத்தத்தைக் கொடுத்தது மட்டுமன்றி, உள்நாட்டு ஆட்சியிலும் அது தலையிட்டது. ஆனால் இரு தசாப்தங்கள் கடந்த பின்னரும், 2.3 பில்லியன் டொலர்களைச் செலவழித்த பின்னரும் கூட, வோஷிங்டனால் தமது இலக்கை அடைய முடியவில்லை. 2021ம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தில் தலிபான் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியது. ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறுவதைத் தவிர அமெரிக்கப் படைகளுக்கு அங்கு வேறு எந்தத் தெரிவும் இருக்கவில்லை.

மோசமான அந்தக் கணத்துக்கு முன்னர் நடைபெற்ற நிகழ்வுகளைப் பின்னோக்கிப் பார்த்த வாடக் வோஷிங்டனும் அதனது நட்பு நாடுகளும், பலமான, நீடித்து நிலைக்கக்கூடிய ஆட்சியையும் பாதுகாப்புப் படையையும் அங்கு உருவாக்கக் கடுமையாகப் போராடினார்கள். இவ்வாறான முயற்சிகள் பரந்த ஊழல்கள் நடைபெற வழிசமைத்ததுடன், ஆப்கானிய அரசு செயற்றிறன் அற்றதாக இறுதியில் மாறியது. உள்நாட்டில் வாழுகின்ற மக்களின் துயர் துடைக்கும் முயற்சியை முன்னெடுக்கும் செயற்பாட்டில் வெளியிலிருந்து தலிபானுக்கு கிடைத்து வந்த உதவிகளையும் அவர்களால் தடுத்து நிறுத்த முடியவில்லை. இவை எல்லாவற்றுக்கும் மேலாக தலிபானின் கெரில்லாத் தாக்குதல் செயற்பாடுகள், அமெரிக்க மற்றும் ஆப்கானிய படைகளின் மனவுறுதியைத் தகர்த்தன.

இதே தவறுகளையே இஸ்ரேலும் இப்போது செய்துகொண்டிருக்கிறது என்று அந்த முன்னாள் உதவியாளர் நினைவுபடுத்தினார்.

மிகக் கடுமையான இராணுவ அழுத்தத்தின் நடுவிலும் சூழலுக்கு ஏற்றவாறு தம்மை மாற்றியமைத்து, இவ்வாறான தாக்குதல்களினால் அழிந்த விடாது, தமக்குரிய ஆதரவுத் தளத்தைத் தக்க வைத்து, மீண்டெழும் ஆற்றலைக்கொண்டு ஹமாசின் ஆற்றலை அமெரிக்காவைப் போன்று இஸ்ரேலும் குறைத்து மதிப்பிடுகிறது. இரண்டாவதாக மத்திய கிழக்குப் பிரதேசத்தில் சக்தி வாய்ந்த நாடுகளிடமிருந்து ஹமாசுக்குக் கிடைத்து வரும் ஆதரவையும் இவர்கள் சரியாக மதிப்பீடு செய்யவில்லை. மூன்றாவதாக இஸ்ரேல் தொடர்ச்சியாக மேற்கொண்டுவருகின்ற மிகக் கடுமையான இராணுவ நடவடிக்கைகளால் அப்பாவிப் பொதுமக்கள் அதிகமாகக் கொல்லப்பட்டும் காயப்பட்டும் வருவதால் உள்நாட்டிலும் பன்னாட்டு ரீதியாகவும், இஸ்ரேலுக்கு எதிர்ப்பு அதிகரித்துக்கொண்டே வருகிறது. இவை எல்லாவற்றையும் விட மோசமான விடயம் என்னவென்றால் இவ்வாறான செயற்பாடுகளின் காரணமாக மேலும் பலர் ஹமாசுடன் தம்மை இணைத்து வருவதுமாகும்'' என்று அவர் வாதிட்டார்.

ஹமாசை அழித்தொழிப்பது என்பது இலகுவான காரியமல்ல என்பதை வாடக் உறுதியாகத் தெரிவிக்கிறார். ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவின் அனுபவத்தை மீட்டுப்பார்க்கும் போது, இராணுவ அழுத்தம் மட்டும் தீர்வாகாது என்பதை அவர் குறிப்பிடுகின்றார்.

ஹமாசிடமிருந்து வருகின்ற அழுத்தத்தை எதிர்கொள்வதாயின், ஓர் பன்முகப்படுத்தப்பட்ட அணுகுமுறையை இஸ்ரேல் கவனத்தில் கொள்ள வேண்டும். எல்லாவற்றுக்கும் முதலில் காஸாவில் வாழ்கின்ற சாதாரண மக்களது வாழ்வியல் நிலைமைகளை அவர்கள் மேம்படுத்த வேண்டும். ஹமாசின் செல்வாக்குக்கு நிகராகப் பாலஸ்தீன அதிகாரத்துக்குத் தேவையான ஆட்சிக்கட்டமைப்பை விருத்தி செய்ய வேண்டும்.

அதுமட்டுமன்றி, ஹமாசின் மீது இராஜீக மற்றும் பொருண்மிய அழுத்தத்தைக் கொடுக்கக்கூடியவகையில் பன்னாட்டுப் பங்காளிகளுடன் இஸ்ரேல் இணைந்து செயற்பட வேண்டும். சமகாலத்தில் பரந்த பாலஸ்தீன சமூகத்தை அந்நியப்படுத்துகின்ற செயற்பாடுகளை அது கைவிட வேண்டும். அப்பாவிப் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை அதிகமாகக் குறைத்து, பலமான புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையிலான துல்லியமான தாக்குதல்களை முன்னெடுக்க வேண்டும். இறுதியாக, மறைமுகப் பேச்சுவார்த்தைக்கும், முரண்பாட்டுத் தீர்வுக்குமுரிய செயற்பாடுகளுக்கான வாய்ப்புகளை ஆய்வுசெய்வதன் மூலம் எதிர்ப்புணர்வுகளைக் குறைத்து, நீண்ட காலம் நிலைக்கக்கூடிய அரசியல் தீர்வுக்கான சூழமைவை உருவாக்க முடியும்'' என்று இரத்தினச் சுருக்கமான அவர் கூறினார்.

**நன்றி:*rt.com***

## தமிழினத்துக்கு ... தொடர்ச்சி ...

நோக்கிச் சென்றிருக்கக்கூடிய நிலைமை இருந்தது. அதற்கான முயற்சிகளைச் செய்திருக்கலாம். ஆனால், அதனை தமிழ்த் தேசிக் கூட்டமைப்பு கோட்டைவிட்டது. இவ்வாறு பல்வேறு சந்தப்பங்களில் தீர்வைக் கண்டிருக்கக்கூடிய நிலைமைகளை தமிழ்த் தலைமைகள் கோட்டைவிட்டிருந்தன.

**தமிழர்களுடைய கோரிக்கைகளைப் பொறுத்தவரையில் சம்பந்தன் அதிகளவுக்கு விட்டுக்கொடுப்புக்களைச் செய்தார் என்ற ஒரு கருத்து உள்ளது. அவரது இந்த அணுகுமுறை குறித்து உங்கள் பார்வை என்ன?**

சம்மந்தனைப் பொறுத்தவரையில் அவரை எதிர்த்து தமிழ்த் தலைவர்கள் எவரும் பேசமாட்டார்கள். ஏனென்றால், அவ்வாறான ஒரு ஆளுமை அவருக்கு இருந்தது. எல்லோரையும் கட்டுப்படுத்தக்கூடிய அதிகாரம் அவரிடம் இருந்தது. அதனால், ஏனைய தமிழ்த் தலைவர்கள் என்ன சொல்வார்கள் என்பதையிட்டு அவர் கவலைப்படுவதில்லை. தானே முடிவுகளை எடுத்தார். ஆனால், தென்னிலங்கை அதனை எவ்வாறு புரிந்துகொண்டது, அதற்குரிய பரஸ்பர விட்டுக்கொடுப்புக்களை தென்னிலங்கை செய்ததா என்பவைதான் இங்கு முக்கிய பிரச்சினையாக இருக்கின்றது.

**சர் வதேச இராஜதந்திரிகள் சம்பந்தனுக்கு ஒரு அங்கீகாரத்தைக் கொடுத்திருந்தார்கள். அந்த வகையில், சர்வதேச ரீதியாக இலங்கை அரசுக்கு அழுத்தத்தைக் கொடுக்க சம்பந்தன் தவறினாரா?**

அதற்கானவாய்ப்புக்கள் இருந்தன. ஆனால், சம்பந்தன் இந்தியாவை அதிகளவுக்கு நம்பினார். அதேவேளையில், மேற்குலகின் அழுத்தங் கள் எந்தளவுக்கு கொழும்பில் எடுபட்டது என்பது முக்கியமான விடயம். இந்தியாவின் அழுத்தமும் எந்தளவுக்கு தாக்கம் செலுத்தியது என்பதும் முக்கியமானது. ஏனெனில் போர் முடிவுக்கு வந்தபோது 13 பிளஸ் என்று சொன்ன கொழும்பு, அதன் பின்னர் 13 குறித்து பேசுவதையே குறைத்துக்கொண்டது. அதாவது, சர்வதேச சமூகத்தினால் ஓரளவுக்கு மேல் கொழும்பை தமது அழுத்தங்களுக்கு உட்பட வைக்க முடியவில்லை.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.